Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 13 (17.03.2003) திங்கட்கிழமை இதழ் :165




ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக் கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-632)

T.P.No. 222 2063



புறப்படமுன்னர் காத்திருப்பு நேரத்தில் கலந்துரையாடும் புலிகள் குழுவினர்.



ஹெலிகொப்ரரில் பாலசிங்கம் தம்பதியர், கருணா புறப்படும் காட்சி.

## கடற்பிராந்தியப் பிரச்சினைகளே பேச்சில் முதலில் விவாதிக்கப்படும்!

### சுமுகநிலை, பாதுகாப்பு வலயத்திற்கும் முக்கியத்துவம் ஜப்பானுக்குப் புறப்படமுன்னர் பாலா அறிவிப்பு

(கிளிநொச்சி)

**ஜப்பானில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில், அரசியல் விவகாரம், நிதி விவகாரம் என்பன குறித்து முக்கியத்துவப்படுத்திப் பேசுவோம் என, அரசாங்கம் முன்மொழிந்திருக்கின்றபோதும், கடலில் இடம்பெற்ற பிரச்சினைகள் குறித்தே முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டும் எனத் தாம் வற்புறுத்தியுள்ளதாக, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

சமாதானப் பேச்சுக்களுக்காக கிளிநொச்சியிலிருந்து புறப்பட முன்னர், கிளிநொச்சியில் எமது செய்தியாளருடன் உரையாடியபோதே, அவர் இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடலில் இடம்பெற்ற சம்பவம் குறித்து முக்கியத்துவப்படுத்திப் பேச்சு நடத்த வற்புறுத்தவுள்ளோம். இது குறித்து இறுதித்தீர்வு காணப்பட்ட பின்னரே அடுத்த விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அரசாங்கம், அரசியல் விடயங்கள் குறித்தும், நிதி விவகாரங்கள் குறித்தும் முக்கியத்துவமாகப் பேசுவோம் என முன்மொழிந்துள்ளது. ஆனால், நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

**இயல்பு நிலை உருவாக்கம் பற்றியும் முக்கிய பேச்சு**

இம்முறை பேச்சுக்களில் கடல் விவகாரத்துக்கு அடுத்ததாக, இயல்பு நிலை உருவாக்கம் குறித்துப் பேச்சு நடத்தவுள்ளோம். இதற்குக் கூடிய கவனம் செலுத்தப்படும். இந்தப் பேச்சுக்களில், அரசியல் விடயங்கள் மேலோட்டமாகவே பார்க்கப்படும்.

உடனடிப் பிரச்சினைகள், இயல்பு நிலையை மேலும் உருவாக்குதல் என்பன பற்றியே கூடிய கவனம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தளபதிகள் வழியனுப்ப புலிகள் குழு புறப்பட்டது

(கிளிநொச்சி)

ஜப்பானின் ஹெக்கோன் நகரில் நாளை ஆரம்பமாகவுள்ள, ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு, நேற்றுக்காலை வன்னியிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான இந்தக்குழு, நேற்றுக்காலை 11.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கிலிருந்து, விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் புறப்பட்டுச் சென்றது.

அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா, அடேல் பாலசிங்கம், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், அலெக்ஸ், தொல்காப்பியன், நெடியவன் ஆகியோரே

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சு மேசையில் முக்கிய குண்டுகள்!

"ஜப்பானின் ஹெக்கோன் நகரில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுப்பேச்சுவார்த்தை மேசையில் நாம் முக்கியமான குண்டுகளைத் தூக்கிப்போடுவோம்" என்று சிரித்தபடியே தெரிவித்தார் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

பேச்சுவார்த்தைக்குப் புறப்படச் சற்று முன்னர், கிளிநொச்சி விளையாட்டரங்கில் எமது செய்தியாளரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### எரிமலையின் மீது நடக்கவுள்ள பேச்சு!

ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தை, ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவிலிருந்து 80 கிலோமீற்றர் தூரத்திலிருக்கும், ஹெக்கோன் என்ற புகழ்பெற்ற மலைவாசல் ஸ்தலத்தில் இடம்பெறவுள்ளது.

ஹெக்கோன் என்பது, ஜப்பானின் புகழ்பெற்ற ஹூசமி எரிமலையின் தொடர்ச்சியில் அமைந்துள்ளது. இந்தப்பகுதியில், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எரிமலை வெடித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



எரிமலை கொந்தளிக்குமோ...? தணிக்குமோ...?

**சர்வதேசக் கடலில் புலிகள் கப்பல் தாக்கப்பட்ட விவகாரம்**

## கண்காணிப்புக்குழுவின் அறிக்கை அரசு, புலிகளிடம் நேற்று கையளிப்பு

(கொழும்பு)

சர்வதேசக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டது தொடர்பாகத் தமது அறிக்கையை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேற்றுச் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கை - கண்காணிப்புக்குழுவின் பார்வையில், கப்பல் தாக்கப்பட்டது தொடர்பான விடயங்களே குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், எந்தத் தரப்பையும் குற்றம் சாட்டும் வகையில் இந்த அறிக்கை அமையவில்லை என்றும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உப தலைவர் ஹொக்லன்ட் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

அரசாங்கத்திடமும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் விவகாரத்தில் புதிய நடைமுறை; பேச்சில் புலிகள் கவனம் செலுத்துவர்!

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கடல் விவகாரங்களைக் கையாள்வது தொடர்பாக, புதிய நடைமுறைகளை உருவாக்குவது குறித்து ஜப்பானியப் பேச்சுக்களில் கூடிய கவனம் செலுத்தப்படும் என்று, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்திலிருந்து, பேச்சுக்களுக்காகப் புறப்பட்டுச் செல்ல முன்னர் எமது செய்தியாளருடன் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுக்களின்போது, கடல் விவகாரம் தொடர்பான புதிய நடைமுறைகளை உருவாக்குவதற்கே அதிகமாக முயற்சிப்போம்.

இதில் இறுதியான தீர்மானம் எடுத்த பின்னரே, ஏனைய விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனவும் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (க,லி)

## நாட்டில் தேவைக்கு அதிகமான படைகள்; வேறு தேவைக்கு மாற்றுவது எவ்வாறு?

### மைக்கல் றோஸ் இதற்காகவே எதிர்பார்க்கப்படுகிறார்

(கொழும்பு)

தேவைக்கும் அதிகமாக உள்ள இலங்கையின் ஆயுதப்படைகளை, எவ்வாறு வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது என்பது குறித்த அறிக்கையை, பிரித்தானிய முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் மைக்கல் ரோஸிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகத் தெரியவருகின்றது.

தற்போது தேவைக்கும் அதிகமாகவுள்ள ஆயுதப்படைகளை, வெளிநாடுகளில் சமாதானப் பணிகளிலும், வேறு தேவைகளுக்கும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - பிரித்தானிய இராணுவ அதிகாரியான ஜெனரல் மைக்கல் ரோஸைக் கேட்டிருந்தார்.

இதற்கமைய ஜெனரல் மைக்கல் ரோஸ் - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

(சி-626) 021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-300128.

# அமெரிக்கப்படைகளை எதிர்கொள்ள நான்கு தலைமைகளின் கீழ் ஈராக்

## போருக்குத் தயார்படுத்துகிறார் சதாம் ஹுசைன்

அந்நிய ஆக்கிரமிப்புப் படைகளைத் தாக்கியழிப்பதற்காக, ஈராக் நாட்டினை நான்கு பிரதேசங்களாகப் பிரித்து, அப்பிரதேசங்களுக்குத் தலா ஒரு தலைவரைச் சதாம் ஹுசைன் நியமித்துள்ளார்.

இப்பிராந்தியத் தலைவர்கள், அந்நிய ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராகத் தேவையான நடவடிக்கைகளை, சதாமுடன் கலந்தாலோசித்து நிறைவேற்றுதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய மற்றும் ஸ்பெயின் நாடுகளின் பிரதம மந்திரிகளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சந்தித்துப் புதிய இராஜதந்திர நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடவுள்ளார்.

மேலும், பிரான்ஸ், ரஷ்ய மற்றும் ஜெர்மனிய வெளிவிவகார அமைச்சர்கள், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபையில் அவசரக் கூட்டத்தினைக் கூட்டி, ஈராக் தனது ஆயுதங்களைக் களைவதற்கான யதார்த்த பூர்வமான கால அட்டவணையைத் தயாரிக்கும்படி நாளை கோரவுள்ளனர்.

அதேவேளை- மேற்படி ஈராக் மீதான அழுத்தங்களுக்கான இராஜதந்திர நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிவடையுமெனவும், அமெரிக்காவின் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறலாம் எனவும் சர்வதேச ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஜம்மு காஷ்மீரில் தாக்குதலுக்கு 11 பேர் பலி!

இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்தில் ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் ஒன்பது பொலிஸாரும் இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

காஷ்மீரின் கோடைக்காலத் தலைநகரான ஜம்முவில் இருந்து அறுபத்தைந்து கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் கூல் என்னும் நகரில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.


YOGI BEAUTY PARLOUR
LADIES HERBAL BEAUTY CARE & FITNESS CENTRE

யாழ்.நகரில் முதன்முறையாக பெண்களுக்காக எமது அழகு நிலையம் இயந்திர சாதனங்கள் மூலமாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நவீன உடற்பயிற்சி சாதனங்கள் மூலமாக பெண்கள் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்காக பெண்களுக்கான ஜிம் (GYM) பயிற்சி வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

*முகப்பரு சிகிச்சை
*பொடுகு சிகிச்சை
*முடி உதிர்தலுக்கான சிகிச்சை
(HIGH FREQUENCY TREATMENT)
* HAIR REBONDING
* HAIR PERMING
* HAIR COLOURING
*GOLD FACIAL
*PEARL FACIAL
(SUPERSONIC TREATMENT)
*கரும்புள்ளிகள் அகற்றுதல் (WITH SPOT REMOVER)

உங்கள் எண்ணத்தில் எங்கள் கைவண்ணம் சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை அலங்காரங்களை வித்தியாசமாகவும் அழகாகவும் திருப்தியாகவும் செய்து கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

நீங்களும் அழகுக்கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா?

எமது அழகு நிலையத்தில் தற்பொழுது அழகுக்கலை Diploma பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-
MRS. YOHINI SHANMUGANATHAN
Dip.in.cosmetology, Beauty therapy, Hair Dressing & Home Science (India, Co.Srilanka)
75, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
222 2796
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (285)



விற்பனைக்கு
MOTROLA தொலைபேசி ஒன்று விற்பனைக்கு உண்டு.
GEEVA STORES,
K.K.S. Road,
Mallagam.
(சி-689)



மலிவு விற்பனை
20% முதல் 50% வரை
புதுக்கணக்குப் போடவிருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது. ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-687)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## இன்றைய நாள் இனிய நாள்

### 17-03-2003 - திங்கட்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- புதிய சிநேகிதம், தனலாபம், தேக ஆரோக்கியம் தருமகாரியம், தொழில் சிறப்பு. |
| இடபம் | :- ஏமாற்றப்படுதல், மனக்கவலை, நேத்திர ரோகம், சத்துரு பயம். |
| மிதுனம் | :- இனசன விரோதம், வீண்பழிகேட்டல், வாகன நஷ்டம், வீண் பிரயாசை. |
| கர்க்கடகம் | :- தொழில் குறைவு, தூக்கக் குறைவு, பிரயாணக் கஷ்டம், பொருட்செலவு. |
| சிங்கம் | :- ஆரோக்கியம், அதிக பிரயாசம், பலவித பொருட்பேறு, தருமகாரிய செலவு. |
| கன்னி | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, பெரியோர் சிநேகம், தொழில்மூலம் பேரும் புகழும் கிடைத்தல். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- மனக்கவலை, குடும்ப விரோதம், பிரயாண நஷ்டம், தொழில் குறைவு. |
| விருச்சிகம் | :- பிரயாசை மிகுதி, இல்லச்சிறப்பு, பெரியோர் மதிப்பு, சந்தோஷம், நற்குண விருத்தி. |
| தனு | :- இரத்தக் காயங்கள், வாக்குக்கலகம், மனக்கவலை, புத்திரரால் கவலை. |
| மகரம் | :- நினைத்த காரிய சித்தி, புதிய ஸ்தானம், ஆபரண லாபம், பெரியோர் மதிப்பு. |
| கும்பம் | :- பகைவர் தொல்லை, தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, தேகசுகக்குறைவு, நற்கீர்த்தி. |
| மீனம் | :- பொருள் வரவு, திருடரால் பயம், சௌக்கியம், ரோகபீடை, குடும்ப மகிழ்ச்சி. |

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

### மின்பாவனையாளர் சேவை நிலைய மாற்றங்கள்

தற்போது யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, அரசடி வீதிச் சந்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் யாழ்.பராமரிப்பு மின்பாவனையாளர் சேவை நிலையம் (திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி, நீர்வேலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது) 2003.03.19ஆம் திகதி தொடக்கம் கொக்குவில், குளப்பிட்டிச்சந்தி, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றிற்கு இடம் மாறவுள்ளது என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.

இதுவரை சுன்னாகம் மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தாவடி, சுதுமலை ஆகிய பிரதேசங்கள் 2003.04.01ஆம் திகதி தொடக்கம் மேற்குறித்த நிலையத்தின் கீழ் வருகின்றன. யாழ்.பராமரிப்பு மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்வேலி, கரந்தன் ஆகிய பிரதேசங்கள் சுன்னாகம் சேவை நிலையத்துடன் இத்திகதி முதல் இணைக்கப்படுகின்றன.

அதேதினம் முதல் சுன்னாகம் சேவை நிலையத்தின் கீழ் இதுவரை இருந்த இளவாலை, மாதகல் ஆகிய பிரதேசங்கள் சித்தங்கேணியில் இயங்கிவரும் வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையத்துடன் சேர்க்கப்படுகின்றன.

இந்த மாற்றங்களை அவ்வப்பகுதி மின்பாவனையாளர்கள் கவனத்திலெடுத்து உரிய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் மின்னிணைப்பு சம்பந்தமான வேலைகளைச் செய்வித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை
(சி-690)


இந்தியா போட்டா ஆச்சிரம இறை தியானக் குழுவினரால் நடாத்தப்படும்

இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்

மார்ச் 19, 20, 21 ஆம் திகதிகளில்
யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய முன்றிலில்
தினமும் மாலை 3.30 மணிமுதல் 7.00 மணிவரை
இவ்வழிபாடுகளில் பங்குபற்றுவோர் மூன்று தினங்களும் தொடர்ச்சியாகப் பங்குபற்றுவது மிகுந்த பலனைக் கொடுக்கும்.
பாவ வாழ்விலிருந்து விடுதலை பெற, கவலைகள், கஷ்டங்கள் நீங்கி அமைதிபெற, நோய்கள் நீங்க உலக அமைதி பிறக்க நம்பிக்கையோடு வாருங்கள்.
இறுதிப் பேருந்தில் வீடு திரும்பலாம். மூன்று நாட்களுக்கும் தங்கியிருக்க விரும்புவோருக்கு தங்குமிட வசதிகள் உண்டு.
தும்பளை திருத்தலத்தில் 21 ஆம் திகதி வெள்ளி காலை 9 - 12 மணிவரை குணமாக்கல் வழிபாடு
குருக்கள், துறவியர், அருட்சகோதரிகளுக்கு 20 ஆம் திகதி வியாழன் - காலை 9.30 - 12.30 மணிவரை ஆயர் இல்லத்தில்.
- இறை தியான குழுவினர். (சி-687) ஆயர் இல்லம்.



நாளை செவ்வாய்க் கிழமை
மாலை 3.30 மணிக்கு
யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்
நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்

ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்
இலட்சியம் நோக்கிய பயணம்
கலக்கி மண்ணுலகை அலைக்கும் என்றாலும்
குலுக்கி விண்வெளியைக் குலைக்கும் என்றாலும்
இலட்சியம் நோக்கிய பயணம்
கூட்டுருவாக்கம்
சாந்தினி சிவநேசன்
தவநாதன் றொபேட்
சா.சிவயோகன்
இ.முருகையன்
குழந்தை ம.சண்முகலிங்கம்
அனுமதி ரூ50/- மட்டுமே
பார்க்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்.



ராஜா யாழ்ப்பாணம்.
இன்றுமுதல் சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த
மாயி
நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 காட்சி (சி-628)



நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பிரபு, வைஜயந்தி நடித்த
வண்ணத்தமிழ் பாட்டு
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
RUSH HOUR - 2
(சி-627)

## வில்பத்து சரணாலயம் திறப்பு


வில்பத்து சரணாலயம் நேற்று முதல் மீண்டும் பொதுமக்கள் சென்று வருவதற்காகத் திறந்துவிடப்பட்டிருக்கின்றது. 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர், வில்பத்து சரணாலயத்துக்குச்செல்லப் பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாம்பு கடித்து பெண் மரணம்!

இரவுவேளையில் கிணற்றடிக்குச் சென்ற பெண் ஒருவர், பாம்பு கடித்து பலியான சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வைத்தி பூரணம் (வயது 52) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

# உடன்பாட்டை கடற்படை மீறவில்லையென்று விமானநிலையத்தில் பீரிஸ் வலியுறுத்து



(கொழும்பு)

ஜப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கான அரச தரப்புப் பிரதிநிதிகள் குழு, நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது.

ஹெக்கோன் நகரில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுக்களில் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான அரச தரப்புக்குழு பங்குபற்றுகிறது.

இக்குழுவில் அமைச்சர் மிலிந்த மொறகொட, அமைச்சர் ரவூப் ஹக்கீம், அரசின் சமாதான செயலகச் செயலாளர் பேனாட் குணதிலக ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

நாளை ஆரம்பமாகும் பேச்சுக்கள் 21 ஆம் திகதிவரை நீடிக்கும். இப்பேச்சுக்களுக்காகப் புறப்பட்டுச செல்ல முன்னர், விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் -

இந்தப் பேச்சுக்களின்போது, அரசியல் விவகாரங்கள் குறித்து ஆராயப்படும். அத்துடன், கிழக்குக் கடற்பிரதேசத்தில் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விடயம் தொடர்பாக விரிவாகப் பேசப்படும்.

புலிகளின் கப்பலை மூழ்கடித்த சம்பவத்தில் கடற்படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் எந்தப் பிரிவையும் மீறவில்லை. கடற்படையினர் சர்வதேச சட்டங்களின்படியே நடந்துகொண்டனர்.

இந்தப் பிரச்சினை குறித்து விரிவான பேச்சுக்களைப் புலிகளுடன் நடத்தவிருக்கிறோம் என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்

## ஒலிநாடா வெளியீடு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விவலய ஆரமப கல்விப் பிரிவினரால் தரம் 5 பாடப் புத்தக ஒலிநாடா கடந்த வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்வொலிப்பேழையின் வெளியீட்டுவிழா ஆரம்பகல்வி, கல்விப் பணிப்பாளர் த.சிறீஸ்கந்தராசா தலைமையில் இடம்பெற்றது. இவ்விழாவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, நுணாவில் அமிர் தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# நாடு திரும்புகிறார் நோர்வே தூதுவர்!

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவராகப் பணியாற்றும் ஜோன் வெஸ்பேர்க்கின் பதவிக்காலம் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதியுடன் முடிவடையவிருக்கிறது. இதையடுத்து அவர் நாடு திரும்பவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜப்பானின் ஹெக்கோன் நகரில் நாளை ஆரம்பமாகவுள்ள அரச - புலிகள் தரப்புக்களுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்களிலேயே ஜோன் வெஸ்பேர்க் இறுதியாகப் பங்கேற்பார் என நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெஸ்பேர்க் இலங்கைக்கான தூதுவராகப் பதவிவகித்த காலத்திலேயே இலங்கைக்கான சமாதான முயற்சிகளில் நோர்வே பங்கெடுக்க ஆரம்பித்தது என்பதுடன், இவருக்கு எதிராக ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகள் பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் மீதான தாக்குதல் திட்டம்; எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் ஒன்றை எதிர்க்கட்சிகள் நடத்தவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பங்குபற்றவுள்ளன.

ஈராக் மீதான தாக்குதல் திட்டத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து நடத்தப்படவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில், வளைகுடா நெருக்கடி தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு வற்புறுத்தப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகரும் மேல்மாகாண ஆளுநருமான அலவி மௌலானா தெரிவித்தார்.

# வளைகுடாவில் போர் வெடித்தாலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது!

## அரசாங்கம் அறிவிப்பு

வளைகுடாவில் போர் ஏற்பட்டாலும் நாட்டில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. தற்போது அரசாங்கத்தின் களஞ்சியங்களில் இரண்டு மாதத்திற்குத் தேவையான உணவுப்பொருட்கள் கையிருப்பில் இருப்பதாகவும், தனியாரிடமும் குறிப்பிட்டளவு கையிருப்பு இருப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

வளைகுடாப் போர் ஏற்பட்டால் எரிபொருளின் விலை அதிகரிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, எரிபொருள் விலை உடனடியாக அதிகரிக்கப்படும் வாய்ப்புகள் இல்லை என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவிருத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா தயாராகி வருவதால் உலகசந்தையில் எரிபொருளுக்கான விலை உயர்ந்து வருவதாகவும், இதற்கு ஏற்றவாறு எரிபொருள் விலையை மாற்றியமைக்க வேண்டியதேவை இருக்கின்றபோதும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உடனடி விலை அதிகரிப்பை அரசாங்கம் மேற்கொள்ளாது என்றும் சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

# இளைஞர் குழு தாக்கியதில் மூவர் படுகாயமுற்றனர்!

## முத்திரைச் சந்தியில் சம்பவம்

இரவுவேளை வீதியால் சென்றோரை வழிமறித்து இனந்தெரியாத இளைஞர்குழு தாக்கியதில் காயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வெள்ளியிரவு முத்திரைச் சந்திப்பகுதியில் இந்தச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தில் முத்திரைச் சந்தியைச்சேர்ந்த மாணிக்கம் தனபாலசிங்கம் (வயது 40), கேசவன் ஜெயக்குமார் (வயது 22), தம்பிராசா சதீஸ் (வயது 28) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த இவர்களை வழிமறித்த ஐந்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் கம்பிகள், கத்திகளால் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

(ச)



2002 ஆம் ஆண்டு வடமராட்சி வலயமட்டத்திலான 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில், யாழ்.தேவரையாளி இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது. அவ்வணியின் வீரர்களைப் படத்தில் காணலாம்.

# வன்னிப் பெருநிலப்பரப்புக்கு எரிபொருள் கொண்டு செல்வதை படையினர் மட்டுப்படுத்தியுள்ளனர்!

வன்னிப் பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் எரிபொருளின் அளவைப் படையினர் மட்டுப்படுத்தியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது கூட்டுறவுச்சங்கம் வழக்கமாக எடுத்துவரும் எரிபொருளின் அளவு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பொதுமக்களுக்கு பெற்றோலை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே விநியோகிக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளதாக கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் தெரிவித்தார். தற்போது பரந்தன் எரிபொருள் நிலையத்தில் ஒருவருக்கு ஒரு லீற்றர் வீதமே பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

# நீதி அமைச்சராக இருப்பதற்கு லொக்குபண்டாரவுக்கு தகுதியில்லை!

## மங்கள சமரவீர சொல்கிறார்

விடுதலைப் புலிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தைத் திறந்து நீதி, நிர்வாகத்தை நடத்துகின்றனர். இதற்குப் பின்னரும் நீதியமைச்சர் பதவியிலிருக்கத் தேவையில்லை. இப்பதவியிலிருந்து டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார உடனடியாக விலகவேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இனி, நீதியமைச்சராக இருக்க டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவுக்குப் பொருத்தமிலலை. புலிகளின் நீதி, நிர்வாகக் கட்டமைப்புக்கள் விஸ்தரிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த முடியாத ஒருவர் இப்பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை என்றும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

## பாடசாலை விடுமுறை நீடிப்பு

பாடசாலை மாணவர்களுக்கான முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மே 5 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வருடம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப்பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாவது தெரிந்ததே.

# க.பொ.த. சாதாரணதர பரீட்சை; முடிவுகள் இம்மாத இறுதியில்!

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சையின் முடிவுகள் இம்மாத இறுதியில் அல்லது அடுத்தமாத முற்பகுதியிலேயே வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

வழக்கமாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மார்ச் மாத முற்பகுதியிலேயே வெளியிடப்படும். ஆனால், இம்முறை பாடசாலை மட்டக் கணிப்பீடுகளையும் சேர்த்து பரீட்சை முடிவுகளை வெளியிட வேண்டியிருப்பதாலேயே தாமதம் ஏற்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 3 லட்சத்து 83 ஆயிரத்து 715 மாணவர்கள் பாடசாலைகள் மூலமும், 1 லட்சத்து 30 ஆயிரத்து 781 மாணவர்கள் தனிப்பட்ட ரீதியிலும் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக்கால முற்பணம் 3000 ரூபாவாக அதிகரிப்பு

அரசாங்க ஊழியர்களுக்கான பண்டிகைக்கால முற்பணத்தை மூவாயிரம் ரூபாவாக அதிகரித்திருப்பதாக நிதியமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

சித்திரைப் புதுவருட பண்டிகை முற்பணமாக, அரச ஊழியர்கள் 3 ஆயிரம் ரூபாவைப் பெறமுடியும் என்றும் இதற்கு வட்டி அறவிடப்படமாட்டாதென்றும், சம்பளத்தில் இருந்து பத்து மாதங்கள் இத்தொகை கழிக்கப்படும் என்றும் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

## - வடமராட்சி கல்வி வலயத்தில் -

# 20 முன்பள்ளிகள் மூடப்பட்டதால் 800 சிறார்கள் நிர்க்கதி நிலையில்!

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமையால் வடமராட்சிப் பிரதேசத்தில் இருபதுக்கு மேற்பட்ட முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. இதனால், 800 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதாக வலயக் கல்வித் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் கடந்தகாலங்களில் பொது நிறுவனங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்களால் வழங்கப்பட்டுவந்தன.

கடந்தகால யுத்த நடவடிக்கையால் பொதுநிறுவனங்களின் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், புனர்வாழ்வு அமைச்சினால் உதவிக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. இந்தக் கொடுப்பனவும் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் இடைநிறுத்தப்பட்டது.

இரண்டு வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாதநிலையில், மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்படும் குறைந்தளவு சம்பளமே இவர்களால் பெறமுடிந்தது.

பல்வேறு பயிற்சிகளைப்பெற்று முன்பள்ளி மாணவர்களின் கல்வியில் அக்கறை காட்டிவரும் ஆசிரியர்கள் மனமுடைந்து தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறும், நிரந்தர சம்பளத்திட்டங்களை வழங்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவர்களிடமிருந்து எந்தவிதப் பதிலும் கிடைக்காத நிலையில், முன்பள்ளி ஆசிரியர்கள், தமது சேவையை இடைநிறுத்தி வருகின்றனர்.

இதனால் முன்பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. இதுவரை வடமராட்சிப் பிரதேசத்தில் இருபதுக்கு மேற்பட்ட முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளதுடன், எண்ணூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் முன்பள்ளிகளுக்குச் செல்லாமல் வீடுகளில் தங்கியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று, குடாநாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களிலும் முன்பள்ளிகள் மூடப்பட்டுவருவதாகக் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ச)

## பன்றித்தலைச்சி பொங்கல் விழா

(புத்தூர்)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 4 திங்கட்கிழமைகள் நடைபெறவுள்ளது. (110)

## மகாஜனா-ஸ்கந்தா கிரிக்கெட் போட்டி

(பன்னாலை)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி, எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய இருதினங்களிலும் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (72)

## அலங்கார உற்சவம்

(மல்லாகம்)

மல்லாகம், கோணற்புலம் வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் இந்த உற்சவம் நிறைவு பெறும்.

## விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம்

# சர்வதேச சட்டங்களை கேள்விக்குள்ளாக்குகிறது

## தென்மராட்சி மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

முன்னேற்றமடைந்துவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பி, மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் தமிழ்மக்களின் உரிமைகளை நசுக்கி, அவர்களை அடக்கியாள எத்தனித்துவரும் அரச படையினரின் மிகமோசமான நடவடிக்கையே, அண்மையில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவமென்று தென்மராட்சி மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கடற்படையின் இந்தச் செயற்பாடானது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் மட்டுமல்ல, சர்வதேச சட்டங்களையே கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு ஓராண்டு கடந்துவிட்டது என்றாலும், இந்த ஓராண்டு காலத்தில் பொறுமையிலும் பொறுமையாய் இருந்துவரும் புலிகளைச் சீண்டி, சீற்றங்கொள்ளச்செய்து யுத்தத்தை தொடங்குவதற்கு படையினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

தீவகப் பொறுப்பாளர்ரைத் தாக்கியமை, மானிப்பாயில் பெண் புலிகளைத் தாக்கியமை, நெடுந்தீவில் மூன்று போராளிகளின் வீரச்சாவை ஏற்படுத்தியமை, முகமாலை மற்றும் ஓமந்தை ஊடாகப் பயணஞ்செய்யும் போராளிகளை வேண்டுமென்றே இம்சைப்படுத்துவது எனப் புலிகள் மீதான அடாவடித்தனங்கள் ஒருபுறமும்,

மறுபுறம் - காஞ்சிரங்குடா, திருகோணமலை, வடமராட்சி, மானிப்பாய் எனப் பொதுமக்கள் மீதான அட்டூழியங்களும் நடந்தேறியுள்ளன. இத்தனை ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியிலும், புலிகள் தம் மக்களின் சமாதான வாழ்வு, இயல்புநிலை என்பவற்றுக்காகத் தம்மால் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்துத் தொடர்ந்தும் அமைதிகாத்துவரும் நிலையில், சர்வதேச கடற்பரப்பில் பயணித்த புலிகளின் வர்த்தகக் கப்பலைத் தாக்கிப் பதினொரு போராளிகளுடன் அழித்த செயலானது, மிகப் பெரிய யுத்தநிறுத்த மீறலாக அமைந்துள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில் பயணஞ்செய்த வர்த்தகக் கப்பலைத் தாக்கியழித்துவிட்டு, ஆயுதக்கப்பல் என்றும், கொடியில்லை என்றும், தம்மை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும், ஆட்புல இறைமை, யுத்தநிறுத்த மீறல் என்றும் எத்தனை கதையளப்புக்கள் இடம்பெறுகின்றன.

யுத்தநிறுத்த மீறல் எனக் கடற்படை கருதியிருந்தால், அதனை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்து, அவர்களின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்த்து, அரசாங்கம் செய்த உடன்படிக்கையை மதித்துச் செயற்பட்டிருக்க வேண்டும்.

கரையோரக் காவற்படை - சர்வதேசக் கடற்பரப்புக்குச் சென்றமை, அங்கு வர்த்தகக் கப்பலைத் தடுத்தமை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும், புலிகளுக்கும், பாதுகாப்புச் செயலருக்கும் இடையில் பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்த வேளை, கப்பல் தாக்கியழிக்கப்பட்டமை யாவும் திட்டமிட்டு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான ஆத்திரமூட்டும் செயல் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ளமுடியும்.

அத்துடன், இச்சம்பவத்தின் பின்னணியில் யுத்த முனைப்புக்கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு அதிகாரச் சக்திகளின் கரங்கள் எவ்வாறு செயற்பட்டுள்ளன என்பதையும் மக்கள் நன்கறிவர்.

உடன்பாட்டை மீறி யுத்தத்தைத் தோற்றுவிப்பதற்கான அரச படைகளின் இத்தகைய செயற்பாடுகளை, தென்மராட்சி மக்களின் சார்பில் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், மக்களின் நலன்பேணும் புலிகளின் பொறுமையையும் நாம் பெரிதும் வரவேற்கின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்ட மக்களின் நலன்கருதி அமைக்கப்பட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் முதலுதவி நிலையத்தையும் அதில் பணியாற்றிய சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியினரையும் படத்தில் காணலாம்.

# தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு புதிதாக இரண்டு மாடிக் கட்டடம்!

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு 2 மாடிக் கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது.

தென்மராட்சியில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தின்போது, தென்மராட்சிப் பிரதேசசெயலகம் பாரிய அழிவுக்குள்ளாகியிருந்தது. இதனால், செயலகப் பணிகளை மீளவும் செயலகக் கட்டடத்தில் மேற்கொள்ளமுடியாத நிலையில் - சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள தனியார் வீடொன்றில் தற்போது இயங்கி வருகிறது.

எனவே, பிரதேசசெயலகக் கட்டடம் அமைந்திருந்த காணியிலேயே தெற்குத் திசையை வாயிலாகக் கொண்டு அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்குரிய மதிப்பீட்டுப் பணிகள் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டன. (34)

## வலி.வடக்கு பிரதேச விளையாட்டுவிழா

(மல்லாகம்)

வலி. வடக்குப் பிரதேச வருடாந்த விளையாட்டு விழா, எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இதுவரை நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களுக்கும், வீர, வீராங்கனைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வின் முன்னோடியாக நாளையும், நாளை மறுநாளும் சில விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. வலி. வடக்கு உதவிப் பிரதேசசெயலர் க.பீதாம்பரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராகத் திருமதி ரூபசிங்கம் கலந்துகொள்வார். (68)

# வறுமை ஒழிப்பு முயற்சியில் சமுர்த்தி வங்கிகள் ஈடுபடும்!

## திறப்புவிழாவில் உதவி அரச அதிபர் உரை

(நவிண்டில்)

வறுமைநிலை வரும்பொழுது கல்விகற்க வசதியற்றுப்போவதுடன், சுகாதார வசதிகளும் கிடைக்காமற்போகிறது. இந்த வறுமையை ஒழிப்பதற்காக குடும்பங்களை, குழுக்களாகத் தெரிவுசெய்து, அவர்களுக்கான ஒரு சேமிப்பை உருவாக்கும் நோக்குடனேயே சமுர்த்தி வங்கிகள் செயற்படப்போகின்றன.

-இவ்வாறு நேற்றுமுன்தினம் கரவெட்டிப் பிரதேசசெயலகத்தின் உடுப்பிட்டிப் பகுதிக்கான சமுர்த்தி வங்கித் திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.செயலக உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும்போது, தாங்களாகச் சேமித்து வருமானத்தை அதிகரிக்கும் பழக்கம் மக்கள் மத்தியில் உருவாக இவ்வங்கி ஆதரவாகவுள்ளது. எனவே, இதன் செயற்பாடுகளுக்குச் சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் தெரிவித்தார். (116)


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.டினுஷியா
முகவரி: உலக்கை ஓடை, கம்பர்மலை.

இரண்டாவது அகவையில்

பெயர் : ச.பிரவீன்
முகவரி: வியாபாரி மூலை, பருத்தித்துறை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்




சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி - இருபத்திமூன்று



படிப்படியாக வவுனியா பூத்தது.
பரந்து விரிந்து நகரம் நிமிர்ந்தது.
வடிவு காய்த்தது... வாணிபம் வென்றது.
வளர்ந்து கொங்கிரீட் காடு எழுந்தது.
இடையில் தேர்தலால் நகரினை மீட்டவர்,
இரட்சகர்கள் போல் நடந்து திரிந்தனர்.
தடாலடி ஆட்சி அங்கு பிறந்தது.
தனக்குள் A-9 புகைந்து கிடந்தது.

வவுனியாவிற் பொருட்களை வாங்கியோர்
வலிந்து சயிக்கிள் வலித்து படையினர்
கவியும் எல்லையை விட்டொரு சூனிய
காட்டினூடு மறுபக்கம்... 'நம்மவர்'
குவியும் எல்லைக்குச் செல்வர்; வியாபாரம்
கொழிக்க வைப்பர். யாழ்.நகரின் வயிற்றுக்கு
அவிப்பொருள்... இந்த வழியிற் கிடைத்தது!
அன்று A-9 வேர்வையில் நீந்திற்று!

மனித நடமாட்டம் அற்று எதிரெதிர்
மருங்கிற் துப்பாக்கி வேலி வெருட்டிட
மனம் கலங்கிடும் தாண்டிக்குளம் பாலம்
மனித வேட்டை பலமுறை செய்தது!
கணத்தில் வேட்டெழும்; கதறும் எறிகணை!
காயம் பட்டிடில் தூக்கவும் ஆளற்று...
குனிந்தொதுங்க இடமற்று... அப்பாவிக்
குருதி ஆறுகள் எத்தனை ஓடிற்று?

- ஜெயங்கொண்டான்.

# சாகாத சாவும்



"அம்மா" என்று கூவிக் கொண்டு வளவுள் இறங்கினாள் மீனா. அவளுக்காகக் காத்திருந்த தாய் ஞானம், எழுந்தோடி அவளைக் கட்டிக்கொண்டு "ஹோ"வென்றலறினாள். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, ஏழாலைப் பாடசாலை ஒன்றிலிருந்து வட்டக்கச்சியில் ஒரு பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றவள் ஆசிரியை மீனா. சேரன் - கீரன் இரட்டைத் தம்பிகளில், கீரன் துணையாக அனுப்பப்பட்டான். கீரன் அந்த வன்னிப் பாடசாலையில் படித்து வந்தான். சூரியக்கதிர்கள் அவனை நிரந்தரமாக வன்னியில் முடக்கி வைத்துவிட்டன. 'சிக்குறு' இராணுவ ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்காகப் புலியாகிக் களம் புகுந்த கீரன், புளியங்குளச் சமரில் வீர காவியமாகிவிட்டான். தன் பிஞ்சு


பஞ்சாட்சரம் கதைகள் - 3

மைந்தனை இழந்த துயரை ஏழு வருடம் நெஞ்சுள் வைத்துக் குமுறிய ஞானம், இன்று முழங்கி முழங்கி அழுகிறாள். "நீதிக்காய், மண்ணுக்காய், இனத்துக்காய்ச் செய்யவேண்டியதைச் செய்வதில் நெஞ்சாரத் தன்னை அர்ப்பணித்துத் தெய்வமாகிவிட்ட கீரனுக்காக நாம் அழக் கூடாது.

# வாழாத வாழ்வும்

அவனை அஞ்சலிப்பதே புண்ணியம் என ஒரு பெரியார் நிகழ்த்திய அஞ்சலியுரை, என்னைப் பூரிக்க வைத்ததம்மா. நீங்களும் அழக்கூடாது" என்று மீனா சொல்லும்போது, மிதிவண்டியில் வேகமாகவந்து படலையைக் காலால் உதைத்துத் திறந்த தன் தம்பி சேரனின் நடத்தைகண்டு திடுக்கிட்டாள். "சேரன், உன் அக்காள் வந்திருக்கிறாளடா" என்று அம்மா சொன்னபோது, "சும்மா கத்தாதே. ரி.வியில் நாடகம் தொடங்கப்போகிறது" என்று அவன் அவசரமாக வீட்டுள் ஓடிய செயல், "ஏன் தம்பி 'வகுப்பில்லையா?" என்று அப்பா கேட்டபோது, "வாத்தி கொழும்புக்குப் போய்விட்டான். 'சும்மா கிட" என்ற அவன் கடிப்பு, அவள் வெந்த நெஞ்சில் ஆயிரம் வேல்களைப் பாய்ச்சிவிட "ஐயோ அம்மா" என்றலறினாள். "எனக்கு ஆறுதல் சொல்லிவிட்டு நீ...?" என்று அம்மா திகைக்க - நான் அழுவது, "செத்துத் தெய்வமாகிவிட்ட கீரனுக்காக இல்லை. இருந்தும் மிருகமாகிவிட்ட தம்பி சேரனுக்காக அம்மா" என்றாள் மீனா. ரி.வியின் சத்தமோ அந்தப் பிரதேசத்தை அதிரவைத்தது.

# சுற்றிவளைக்கப்பட்ட



வானத்தை நான் பார்க்கவில்லை.
நட்சத்திரங்களையும் காணவில்லை.
பதுங்குகுழியின்
இருளுக்குள் வீழ்ந்த வாழ்வின்
சருகு நான்.

சூரியன் வந்ததா சென்றதா
நானறியேன்.
நிலவின் ஒளியும் மறந்து போயிற்று.
நிலம் அதிர்கிறது.
குருதியின் மனத்தையும்
சனங்களின் ஓலத்தையும் உணர்கிறேன்.
கந்தக நெடில்
கபாலத்தைப் பிளக்கிறது.

# கிராமத்தின் பதுங்குகுழி!

'வீரர்கள்' முழங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்
அழியும் வாழ்வின் பிரகடனத்தை
ஒவ்வொரு துப்பாக்கியிலும்
ஒவ்வொரு பீரங்கியிலும்.

பூக்கள் இன்னும் எப்படியிருக்கும்
மரங்கள் மிஞ்சியிருக்குமா?
பறவைகளின் சிறகுகளில்
சாவுவந்து குந்திக்கொண்டிருக்கும்
காலம் இதுவல்லவா.

இந்தப் பதுங்குகுழிக்கு
எங்கள் எதிர்காலத்தைக் காப்பாற்றும்
கருணையும் வலிமையும் இருக்கிறதா
அல்லது
எம்மை எதிரிகளாக பிரகடனப்படுத்தி
வருவோரிடம்
பிடித்துக் கொடுத்துவிடும்
ஒற்றனைப் போல இருக்கிறதா
இந்த மௌனக் கிடத்தல்.

- கருணாகரன்.

# இலக்கியச் சோலை

# பாலையும் சோலையும்

## கலாநிதி. சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்



முன்பு இராணுவம் தங்கியிருந்த கட்டடங்களில் எமது கலாசாலை அன்று இயங்கியது. இராணுவத்தின் திரைப்படக் காட்சி மண்டபந்தான் எமது பொதுக்கூட்ட மண்டபம். வசாவிளான் சந்தியிலிருந்து மேற்கு வீதி வழியாய் கால் மைல் நடந்து, பின்பு வடக்கே பனந்தோப்பின் ஊடாகக் கால் மைல் நடந்து பிரதான நுழைவாயிலை அடைதல்வேண்டும். வாயிலிருந்த தார் போட்ட வீதியால் கால் மைல் தொலைவில் அதிபர் அலுவலகம், விரிவுரை மண்டபங்கள், மாணவர், விரிவுரையாளர் விடுதிகள் அமைந்திருந்தன. செழிப்புமிக்க செம்மண் நிலம். விடுதிகளை அடுத்து வாழை, காய்கறித் தோட்டங்கள். விரிவுரை மண்டபத்துக்குத் தெற்குப் புறமாகப் பரந்த பெரிய விளையாட்டு மைதானம். அதன் கிழக்குப்புறத்தில் ஆசிரிய மாணவர் கற்பித்தற் பயிற்சிபெறும் சாதனா பாடசாலை.

இவற்றோடு, வெளியுலகத் தொடர்பின்றி எப்போதும் அமைதியே கொலுவிருக்கும் பலாலி ஆசிரியர் கலாசாலையிலே, எமக்கு மூத்த அண்ணாக்களான (பயிற்சியில் ஓராண்டு நிறைவு செய்தவர்கள்.) பத்தொன்பதின்மருடன் நாங்கள் நாற்பத்தொரு பேர் 1950 இல், பயிலுநராக இணைந்து கொண்டோம். அவ்வாறிணைந்த அந்த முதல்நாள் மறக்கமுடியாததாகும்.

பரபரப்பு, எதிர்பார்ப்பின் விடுப்பூக்கம், புதியசூழலுக்கு இசைவாக்கம் செய்வதற்குமுன் ஏற்படும் அச்சம், தயக்கம் என்ற பல்வேறு உணர்ச்சிகள் எனக்கு மட்டுமல்ல, என் சகபாடிகளான புதியவர்கள் அனைவருக்குமே ஏற்பட்டன. (இது பற்றி எனது நாவலான *'செல்லும் வழி இருட்டின்'* முதல் அத்தியாயத்தில் விரிவாக வர்ணித்துள்ளேன்).

நான் பஸ்ஸேறிப் பலாலிக்குச் செல்லும் வசாவிளான் சந்தியில் சின்னண்ணையுடன் இறங்குப்பெட்டி, வாளி சகிதம் இறங்கியபொழுது இன்றும் என் நெஞ்சைத் தொட்டுக் கனியவும், உருகவும், நெகிழவுமான அந்தச் சம்பவம் இடம்பெற்றது.

"தம்பி வாளியை எடு" என்று சொல்லிவிட்டு, பாரம் நிறைந்த என் இறங்குப் பெட்டியைத் தோளிலே தூக்கி வைத்தபடி, என் சின்னண்ணை முன்னால் நடக்கத் தொடங்கினார். உடன்பிறப்பில்லாத குறையைப் போக்கியதோடு, 1948 ஆம் ஆண்டிலிருந்து என்னையும், என் தாயையும் அழைத்துச் சென்று நாயன்மார்க்கட்டில் வைத்துப் பராமரித்துப் பாதுகாத்தவர், என் தந்தைக்குச் சமமானவர். கூலியாள்போல என் சுமையைத் தாம்சுமந்து வந்தார் என்றால் - அதற்குக் காரணம், தமக்குப் பிள்ளைகள் இல்லாததால் என்னைத் தம் பிள்ளையாகப் பாவித்துவந்த பாசவுணர்வு மட்டுமல்ல. "எங்கள் குடும்பத்தில் முதன் முதல் ஆசிரியனாகப் போகின்றவன். அவன் இறங்குப்பெட்டியைத் தூக்குவதா? அவனுக்கு அது மரியாதையா?" என்ற கௌரவப் பிரச்சினையுந்தான் என்று நினைக்கிறேன். என் தாய்க்கு அடுத்தபடி என் அண்ணியையும், என் தந்தைக்கு அடுத்தபடி சின்னண்ணை கந்தசாமியையும் என்றும் நெஞ்சிலிருத்தி அஞ்சலிசெய்து வருகின்றேன். சின்னண்ணையின் அந்திமக்கிரியைகளைச் செய்யக்கிடைத்தமை என் அரும் பெரும்பேறேயாகும். கோப்பாயில் இயங்கி வந்த அரசினர் ஆசிரியர் கலாசாலை பலாலிக்கு 1948 இல் இடம்பெயர்ந்தது. கோப்பாயில் அவ்வாண்டு தொடக்கம் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை தனித்து இயங்கலாயிற்று. இவற்றைவிட - திருநெல்வேலியிலே சைவாசிரியர் கலாசாலை, கொழும்புத்துறையில் கத்தோலிக்க ஆசிரியர் கலாசாலை, நல்லூரில் கிறிஸ்தவ ஆசிரியர் கலாசாலை என்பனவும் நிலவின. கோப்பாய், பலாலி, திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலைக்கு, ஆசிரியர் கலாசாலை நுழைவுப் போட்டிப் பரீட்சையிலே குறிப்பிட்ட புள்ளிகள் பெற்றவர்கள் தெரிவுபெற்றனர். கத்தோலிக்க ஆசிரியர் கலாசாலைக்கு முன்னையவற்றிலும் குறைந்த புள்ளிகள் பெற்றாலும், பெற்றவர் கத்தோலிக்கராயின் அங்கு பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்பட்டது. கிறிஸ்தவ ஆசிரியர் கலாசாலையிலும் கிறிஸ்தவர்கள் இவ்வாறே பயிலுநராகும் தகுதிபெற்றனர். கிறிஸ்தவரல்லாதவரும் கிறிஸ்தவராய் ஞானஸ்தானம் பெற்றால் அவர்களுக்கும் பயில்வதற்கு வாய்ப்பேற்பட்டது. இவ்வகையிலே, பஞ்சாட்சரக் கிறிஸ்தவர்களாகிப் (பஞ்சாட்சரம் - சம்பளம் ஐந்தெழுத்து) பயிற்சிபெற்ற பின் அரைக் கிறிஸ்தவர், அரைச் சைவராய்ச் சிலர் (ஓய்வுபெற்று) இன்னும் எம்மிடையேயுள்ளனர்.

ஆசிரியர்ப் பயிற்சித் தெரிவில் சமயஞ் சார்ந்த பாகுபாடுகளுக்கேற்பத் தெரிவுகள் நிகழ்ந்தாலும் ஈற்றில் எல்லாரும் பயிற்சித் தராதரம் பெற்று ஒரே பரீட்சைக்குத் தோற்றித் தெரிவடைந்து, ஒரே சம்பளத் திட்டத்தில் ஆசிரிய நியமனம் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். 1961 இல் மதஞ் சார்ந்த சபைகளின் கீழ் இயங்கிய ஆசிரியர் கலாசாலைகள் மூடப்பெற்றன. இன்று கோப்பாய், பலாலி ஆகிய இரண்டிடங்களில் மட்டுமே, யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் கலாசாலைகள் உள்ளன. அரசின் நேரடி நிர்வாகத்தில் 1961 வரை எல்லா ஆசிரியர் கலாசாலைகளும் (சுதேசிய ஆசிரியர் கலாசாலைகளும், சிங்களமொழிக் கலாசாலைகளும் இவற்றுள் அடங்கும்). ஆரம்ப, கனிட்ட வகுப்புக்களிலே கற்பித்தற்கான பயிற்சிகளே அளித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரியும் கோப்பாயில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது).

அதேவேளை, ஆங்கில ஆசிரியர் பயிற்சி, சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களிற் கற்பித்தற்கான பயிற்சி, மகரகமவில் (ஆங்கிலமூலம் கற்று எஸ்.எஸ்.ஸி. பரீட்சையில் தேர்ந்தவர்கள் - சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர்) அளித்ததோடு அவர்களுக்கு, கனிஷ்ட ஆரம்பப் பயிற்சி பெற்றவர்களிலும் ஏறக்குறைய இருமடங்கு வேதனம் வழங்கப்பட்டது.

1961 இலிருந்து தாய்மொழியூடாகக் கல்விவழங்கும் திட்டம் அறிமுகமான பின்னர் - விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமயம், விவசாயம், சங்கீதம், நடனம், மனையியல் ஆகிய பாடங்களில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சம்பளத் திட்டமும் பாகுபாடற்றதாய் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த வரலாற்றுப் பின்னணியில் 1950-51 இல் நான் பெற்ற ஆசிரியர் பயிற்சிபற்றி இனி எடுத்துரைப்பேன்.

ஒழுங்கும், கட்டுப்பாடும் பொருந்திய ஆசிரியர் சமுதாயம் உருவாக வேண்டுமானால், அதற்கேற்ற சூழ்நிலை அமைதல் வேண்டும். அவ்வாறு அமைவதற்கு விடுதியிலே தங்கியிருந்து கல்விமான்களும், அனுபவசாலிகளுமான அதிபர், விரிவுரையாளர்களின் வழிகாட்டலில் ஈராண்டுகள் பயிற்சிபெறுதல் இன்றியமையாதது என்று அன்று கருதப்பட்டது. (இன்று விடுதியில் தங்கியிருந்து பயிற்சி பெறுவதை ஆசிரியர் கலாசாலைகள் தவிர்த்துக்கொண்டுவிட்டன) புதியவனாய் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கல்வியியற் கல்லூரிகளிலே மட்டும் விடுதித்தங்கல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கணிதம், தமிழ், வரலாறு, புவியியல், சுகாதாரம் முதலிய பாடங்களோடு உளவியல், கல்வியியல், கற்பித்தல் முறைகள் ஆகிய பாடங்களும் பயிற்சியின் போது கற்பிக்கப்பட்டன.

தொடரும்....

# கிழக்கும் மேற்கும்

## கௌதம புத்தர் - சேர் ஐசாக் நியூட்டன்



இங்கிலாந்திலுள்ள
'வூல்ஸ்தோப்' ஊரினில்
உதித்தவர் நியூட்டன்!
தந்தையை இழந்ததால்
அன்னையின் ஏழ்மையால்
கல்வியினில் நியூட்டன்
கவனம் செலுத்தவில்லை!
எனினும் - நியூட்டன்
பொறிமுறையாலியங்கும்
காற்றாடி இயந்திரம்
சூரியச் சாயைகள்
பட்டங்கள்
நீர்க்கடிகாரம் எனப்
பலசெய்து கற்றார்!!
கேம்பிறிட்ஜில் கல்வி
கற்றிடச் சென்றார்!
கொள்ளை நோயின்
கொடுமையினாலே
ஊருக்கு மீண்டவர்
புவியீர்ப்பு - ஒளியியல்
நுண்கணிதம் என்பவற்றில்
ஆய்வுகள் தொடர்ந்தார்!
அப்பிள் மரத்தின் கீழ்
ஓர்நாள்
அமர்ந்திருந்த நியூட்டன்
பழமொன்று கீழே
விழுவதைக் கண்டார்!!
'மேல் நோக்கியும்
இவ்வப்பிள் பழம்
போயிருக்கலாமே!
நிலம் நோக்கியேன்
விழுகின்றது?' எனப்
பல நாளாகப்
பலவாறாகச்
சிந்தனை செய்தார்!
'எந்தப் பொருளையும்
தன்பால் ஈர்க்கும்
சக்தியிப் புவிக்குண்டு' -
என்னும் உண்மையைத்
தெளி/ரிந்து கொண்டவர்-
ஒளியின் துணிக்கைக் கொள்கை
அகிலாண்ட ஈர்ப்புவிதி
நிறமாலை என்பவற்றினை
ஆய்வுகள் மூலம்
கண்டு தெளிந்தார்!!
தேற்றங்கள் பலவும்
தெரிந்து விளக்கினார்!!
கோள்களின் ஒழுங்கு - தூரம்
அவற்றின் இயக்கம் என
ஆய்வுகள் செய்து
நிறுவிய நியூட்டனை-
கேம்பிறிட்ஜ் கழகம்
'கணிதப் பேராசிரியராக
பதவியில் அமர்த்திப்
பெருமையில் திளைத்தது'!
'தெறி தொலைக்காட்டியை'
ஆய்வுகள் மூலம்
படைத்தார் நியூட்டன்!
'றோயல் சொசாயிற்றி'
அவரைத்தன் தலைவராய்
ஏற்று மகிழ்ந்தது!
மற்றைய உலோகங்களைப்
பொன்னாக மாற்றும்
'இரசவாத வித்தை'யின்
இயல்புகள் தெளிந்திட
இடையீடின்றித்
தொடர்ந்து முயன்றார்!
எண்பத்து நாலாண்டு
ஐசாக் நியூட்டன்
மணமின்றி வாழ்ந்தார்!
விஞ்ஞானத் துறையில்
அவரின் வெற்றிகள்
எண்ணிலடங்கா!
அவரின் பெருமைகள்
சொல்லிலடங்கா!!



கௌதம புத்தருக்கு
வெள்ளரச மரத்தின் கீழே
மெஞ்ஞான விளக்கம் - கிழக்கில்!
ஐசாக் நியூட்டனுக்கோ
அப்பிள் மரத்தின் கீழே
விஞ்ஞான விளக்கம் - மேற்கில்!!

*கௌதம புத்தர் - கி.மு. 563 - 483*
*ஐசாக் நியூட்டன் - கி.பி. 25-12 -1642-1727*

புருது

# ஜோ.ஜோண்சன் ராஜ்குமாரின் "கம்பன் மகன்"

## (தென்மோடி நாட்டுக்கூத்து)




அண்மையில் வெளிவந்த நூல்களில் நாட்டுக்கூத்துத் தொடர்பான நூல்களில் ஜோ.ஜோண்சன் ராஜ்குமாரின் "கம்பன் மகன்" நாட்டுக் கூத்து நூல் குறிப்பிடத்தக்கவொன்றாகும். எமது பாரம்பரியக் கலை வடிவமாகிய "நாட்டுக்கூத்து" நூலுருவாக்கம்பெற்றது, பிற்பட்ட காலத்திலேயே ஆகும். பேராசிரியர் வித்தியானந்தன், ஆசிர்வாதம் போன்றோர் கூத்து நூல்களை அச்சு வாகனமேற்றியவர்களில் குறிப்பிடத்தகக்கவர்கள். அவர்களைத் தொடர்ந்து விரல்விட்டு எண்ணத்தக்க நாட்டுக்கூத்து நூல்களே வெளிவந்தன எனலாம். பல நூல்களை வெளியிட்ட திருமறைக் கலாமன்றம் தற்போது "கம்பன் மகன்" என்ற புதிய நாட்டுக் கூத்தை வெளியிட்டுள்ளது.

கம்பன் மகன் 'தென்மோடி' நாட்டுக்கூத்து மரபில் பாடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண கரையோரப் பிரதேசங்களில் செழுமையுடன் காணப்படும் இம்மரபில், அதிகமாகக் கத்தோலிக்கக் கதைகளே வழங்கி வருகின்றன. ஆனால், "கம்பன் மகன்" - இலக்கிய கதையைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. இதனை அண்ணாவியர் பேக்மன் ஜெயராஜாவின் ஊக்கத்தில், ஜோண்சன் ராஜ்குமார் எழுதியுள்ளார்.

அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா அவர்கள் இன்று வாழ்ந்து

# நூல் அகம்

கொண்டிருக்கும் விரல்விட்டு எண்ணத்தக்க அண்ணாவிமார்களில் முதன்மையானவர். அவரின் அனுபவத்தை அவர் வழங்கிய இராக, தாள நேர்த்திகளில் கண்டுணரக் கூடியதாகவுள்ளது. ஜோண்சன் ராஜ்குமார், திருமறைக் கலாமன்றம் உருவாக்கிய இளங்கலைஞர்களில் ஒருவர். தொண்ணூறுகளில் வெளிப்பட்ட இளம் நாடக எழுத்தாளரும், நெறியாளருமாவார். இவரது "ஜீவ பிரயத்தனம்", "ஈன்ற பொழுதில்", "குருதி கழுவிய குவலயம்", "ஸ்பாட்டக்கஸ்" போன்ற பல நாடகங்கள் பேசப்படத்தக்க நாடகங்களாக இருந்தமையை யாவரும் அறிவர். அவரின் எழுத்தாற்றலும், அரங்கியல் சார்ந்த அறிவும் இக்கூத்து நூலில் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கின்றன.

கம்பரின் மகனாகிய அம்பிகாபதியினதும், இளவரசி அமராபதியினதும் காதலைக் கருப்பொருளாகக் கொண்டு, சோழ மன்னன் குலோத்துங்கனின் நீதிதவறிய ஆட்சிமுறையையும் - சாதி, குல வேறுபாட்டின் கொடூரத்தையும் சாடுகின்ற படைப்பாக இந்நாடகத்தின் செய்தியமைந்துள்ளது. இதனை, கூத்தின் பின்னுரை பின்வருமாறு குறிப்பிட்டு நிற்கின்றது.

"...இந்தக் கதை காதலுக்காகக் கண்ணீர் சிந்த வைப்பதற்கானதல்ல, அது கதையின் வெளிவரைவு. சமூக மேலோங்கிகளின் சமாந்திரமற்ற பார்வைக் கோளாறுக்குப் பலியாகும் மனிதம் பற்றிய அவலமே இதன் உள்ளுறை..."

மரபு வழிப்பட்ட யாப்பிலக்கணங்களுக்கு அமைய, எல்லாப் பாடல்களும் அமையாதுவிடினும், மிகச்சிறப்பான கவித்துவத்தையும், கருத்தாளத்தையும், இசைக்கேற்ற சந்த நெகிழ்வையும் இக்கூத்தின் பாடல்கள் கொண்டுள்ளன. அத்துடன், எளிமையாக யாவருக்கும் விளங்கத்தக்க வகையிலும் பாடல்கள் அமைந்துள்ளன. காட்சிகளின் பிரிப்புமுறையும், கதையை நகர்த்திச் சென்ற விதமும் சிறந்த கதைப் பின்னலிற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பாடல்களுக்கிடையேயான ஊட்டு வசனங்கள், அரங்கக் குறிப்புக்கள் நாடகப் பிரதியை முழுமைபடுத்துகின்றன.

இக்கூத்து நூலின் மற்றொரு சிறப்பம்சம், பின்னிணைப்பாக அண்ணாவியர் பேக்மன் ஜெயராஜாவின் நேர்காணல் இணைக்கப்பட்டிருப்பது ஆகும். பூந்தான் யோசப்பு காலம் முதலான நாட்டுக்கூத்துப் பற்றிய பல அரிய தகவல்கள் இந்நேர்காணலுக்கூடாக வெளிப்படுத்தப் பட்டுள்ளமை, அரங்க ஆர்வலருக்கும், மாணவருக்கும் பயன்தரும் அரிய முயற்சியாகும். அத்துடன், வடமாகாணத்தில் மேடையேற்றப்பட்ட கூத்து நூல்கள் பட்டியலும் இணைக்கப்பட்டிருப்பதும் மிகச்சிறந்த செயற்பாடாகும்.

மொத்தத்தில் "நாட்டுக்கூத்து" காலத்தால் அழிந்துவிடுமோ என்று பலரும் அங்கலாய்க்கும் காலத்தில், அது அழியவிடாது பாதுகாக்கப்படும் என்று ஓர் இளம் படைப்பாளியின் "கம்பன் மகன்" கட்டியம் கூறி நிற்கின்றது. இக்கூத்து நூல் வடிவம்பெற்ற அதேவேளை, அண்மையில் அரங்கேற்றப்பட்டு, பலரின் பாராட்டுக்களையும் பெற்று நிற்பதும், இந்நூலின் அளிக்கைச் சாத்தியத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**- எஸ். சாந்தகுமார்.**

# கறுப்பில் இருந்த பெயர்

## (கியூபா நாட்டுக் கவிதை)

என்னுடைய தோல் அனைத்தும்
உண்மையிலேயே
ஸ்பானிய மாபிள் சிலையிலிருந்து
வந்ததா?
என்னுடைய பயங்கரமான குரல்...
என் தொண்டைக் குழியிலிருந்து
வரும் அலறல்...
எனது எலும்புகள்... எல்லாமே
அங்கிருந்து தான் வந்தனவா?
நிச்சயமாகத் தெரியுமா?
சீற்றத்தின் அறிகுறியோடு
நீ எழுதி முத்திரையிட்டது தவிர
வேறு எதுவுமே இல்லையா?
என் கண்களில் தெரியும்
முரசங்களை நீ காணவில்லையா?
அந்த முரசங்கள்
உலர்ந்த கண்ணீர் துளிகளிரண்டை
வலிந்து வெளித்தள்ளுவதை
நீ காணவில்லையா?
சாட்டையால் எழுதப்பட்ட ஒரு பெரிய அடையாளம்
(தோலை விடக் கறுப்பான)
பெரும் கருமடையாளம் கொண்ட
மூதாதையர் ஒருவர்
எனக்கு இல்லையா?
மண்டிங்கோ, கொங்கோ டஹோமியிலருந்து
வந்த மூதாதையர் யாரும்
எனக்கு இல்லையா?



தமிழில் - வின்சென்ற் புலோரன்ஸ்

*ஆங்கிலத்தலைப்பு* :- The Name in Black.
*எழுதியவர்* :- நிக்கொலஸ் கிலென்
*நாடு* :- கியூபா

# சந்திப்பும் நினைவுகளும்...

ஒரு காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இன்றைய நான்கு முன்னணிப் படைப்பாளிகள் எழுத ஆரம்பித்தார்கள். செங்கை ஆழியன், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன் ஆகியோரே அவர்களாவர்.

செங்கை ஆழியனும், செ.யோகநாதனும் இலங்கை நிர்வாகசேவையில் இணைந்தனர். செம்பியன் செல்வன் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார்.

செ.கதிர்காமநாதனுக்கு உரிய காலத்தில் அரசசேவையில் இணையச் சந்தர்ப்பம் வராததினால், அவர் சிலகாலம் 'மித்திரன்' வாரமலரில் கடமையாற்றினார். மித்திரன் வாரமலருக்கே அப்போது க.கனகரத்தினம் என்பவர்தான் பொறுப்பாக இருந்தார். இவர், அவருக்கே அடுத்தபடியாகக் கடமையாற்றினார். நான் வீரகேசரிக்கு அடிக்கடி சென்று வந்தபடியால் பலதடவை செ. கதிர்காமநாதனைச் சந்திக்க நேர்ந்தது.

மித்திரனில் கடமையாற்றும்போது, அப்பத்திரிகைகளில் பல நாவல்கள் எழுதினார். கிருஷன்சந்தரின் நாவலொன்றையும் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

அந்தக் காலத்தில் கொழும்பிலிருந்து வெளிவந்த அஞ்சலி சஞ்சிகைக்கும், அவருக்கும் இலக்கியம் சம்பந்தமாக நெருக்கம் இருந்தது.

## அமரர் செ.கதிர்காமநாதன்

அப்பொழுது, அஞ்சலியில் அவர் எழுதிய, 'வெறும் சோற்றுக்காகவல்ல' என்ற சிறுகதை அப்போது பலரால் சிலாகித்துப் பேசப்பட்டது. ஒரு வீட்டுக்கு வேலை செய்வதற்காக ஒரு சிறுமி அமர்த்தப்பட்டாள். அவளுக்கு உணவு, உடைக்கும் குறைவே இல்லை. இருந்தபோதிலும், அதிலும்பார்க்க பெற்றோர்களது பாசம் அவளைவிட்டு வைக்கவில்லை. இதையே 'வெறும் சோற்றுக்காகவல்ல' கதை தொட்டுக்காட்டுகிறது.

அவர் எழுதிய, 'கொட்டும் பனி' சிறுகதைத் தொகுப்பில்; 'ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்' என்ற சிறுகதை, ஒரு ஏழை மாணவனின் கல்லூரி வாழ்க்கை பற்றிப் படம்பிடித்துக் காட்டுகிறது. இந்தக் கதை அவருடைய சுயகதைதான் என்று பலர் அபிப்பிராயப்பட்டதுண்டு.

மித்திரனிலிருந்து கடைமையாற்றியபோதுதான் நிர்வாக சேவையில் சித்தியடைந்து, கமத்தொழில் சேவைத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகக் கடமை பார்த்து வந்தார். அவரோடு தொலைபேசிமூலம் பலதடவைகள் தொடர்பு கொண்டேன்.

ஒருநாள் தொலைபேசியில் தொடர்பு கொண்டுவிட்டு, ஏழுநாள் லீவில் யாழ்ப்பாணம் வந்திருந்தேன். பின்பு, கொழும்பு திரும்பிக்கொண்டிருந்தபோது, ஒரு முதியவர் யார் என்று சொல்லாமல், புகையிரத்தில் ஒரு இறப்புச் செய்தியைச் சொல்லிக்கொண்டிருந்தார். எனது சிந்தனையில் அவரது பேச்சுக்கள் கதிர்காமநாதனுக்குத்தான் இந்த அவலம் ஏற்பட்டதாக அனுமானிக்கிறது. கொழும்பு சென்று, தொலைபேசிமூலம் அந்தப் படைப்பாளியின் இறப்பை உறுதிபடுத்தினேன்.

ஈழத்து இலக்கிய உலகிற்கு இன்னும் பல ஆக்கங்களைத் தந்து, இலக்கியத்துறைக்குப் காத்திரமான பங்களிப்பை வழங்குவார் என்றிருந்த அந்த இளம் படைப்பாளியின் மரணம் துரதிர்ஷ்டவசமானது.

**- மணிசேகரன்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## உழவர் துன்பம்...!

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் வாழ்ந்துவரும் விவசாயிகளுக்கு, கடந்தகால யுத்த நடவடிக்கைகள் தொழில்சார் ரீதியில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

ஒவ்வொரு கட்ட விவசாய நடவடிக்கைகளிலும் - ஏராளம் பிரச்சினைகளை எதிர்கொண்டவர்களாகவே அவர்களது தொழில் முயற்சிகள் நெருக்கடிகளைச் சந்தித்து வந்தன.

தரமான விதைகள், உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளைப் பெறுவதற்கு விதிக்கப்பட்ட தடைகள், எரிபொருட் தட்டுப்பாடு என்பவற்றோடு விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதுவரை - விவசாயிகள் பட்ட துன்பங்கள் சொல்லிமாளாதவை.

யுத்த காலத்தில் நீடித்துவந்த இந்த நெருக்கடிகளும், தடைகளும் - தற்போதைய சூழ்நிலையில் தளர்ந்து வந்தாலும் - சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரையில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவையாகவே தொடர்கின்றன.

போர் நிறுத்தம் அமுலாக்கப்பட்டதன் பின்னர் - ஏ-9 போக்குவரத்துப் பாதை திறக்கப்பட்டாலும், அதனூடாக வன்னியையும், யாழ்ப்பாணத்தையும் நோக்கியதான பொருட்களின் வரவு அதிகரித்துள்ள அளவுக்கு - இங்கிருந்து விளைபொருட்கள் தென்பகுதிக்குச் சந்தைப்படுத்தலுக்காகச் செல்வது ஒப்பீட்டு ரீதியில் மிகக்குறைந்ததாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் நுகர்வுக்கு மிஞ்சிய விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏராளமாகக் காணப்படுகின்ற போதும் - இது தொடர்பில், இதுவரை முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக தனியார் சிலர் மட்டுமே இந்தச் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களும் தமக்கான இலாபத்தையும், தரகுப்பணத்தையும் முதன்மைப்படுத்துவதால் - விவசாயிகள், தாம் வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி - தமது முழுமுயற்சியையும் ஈடுபடுத்தி உருவாக்கிய விளைபொருட்களால் இலாபத்தைப் பெறமுடியாத சூழலே காணப்படுகின்றது.

தமது உற்பத்திச் செலவிலும் - குறைவான விலைக்கே விளைபொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதால், விவசாயிகள்- தமது முயற்சிகள் கண்முன்னாலேயே மதிப்பிழந்து கிடப்பதைக் கண்டு வேதனைப்படுவது பரவலாகக் காணப்படுகின்றது.

ஏற்கனவே - இராணுவ நடவடிக்கைகளாலும், இடம்பெயர்வாலும் தமது சொத்துக்களை இழந்து, சீவனோபாயத்துக்கே அல்லற்படும் விவசாயிகள் - மீண்டும் தமது விவசாய முயற்சிகளில் முதலிடுவதற்கு, விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதால் கிடைக்கும் பணத்தை எதிர்பார்த்து ஏமாந்து நிற்கும் கதைகளும் ஏராளமுண்டு.

இந்த அவலத்தைப் போக்குவதற்கு - அரசாங்கமோ, கூட்டுறவுச் சங்கங்களோ, வேறு அமைப்புக்களோ உதவுவதற்கு முன்வருவதில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளின் சந்தைப்படுத்தல் பிரச்சினையை தீர்த்துவைக்க - யாழ்ப்பாணத்திலிருந்து உருளைக்கிழங்கும், வெங்காயமும் கொள்வனவு செய்யப்போவதாக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. ஆனால் - இந்த அறிவிப்பு வெளியான சில நாட்களுக்குள்ளாகவே, இந்தியாவிலிருந்து பெருமெடுப்பில் உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்யப் போவதான முயற்சிகளில் அந்த அமைச்சு தீவிரமாக இறங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு- வழங்கப்படும் உறுதிமொழிகளும் காற்றில் பறந்துவர - இங்கு இருக்கும் விளைபொருட்களும் - விற்பனை வாய்ப்பின்றி அழுகி நாசமடைந்து வருவதாக விவசாயிகளின் துன்பம் எல்லைமீறுகின்றது.

கொழும்பிலிருந்து பொருட்களை எடுத்துவந்து - யாழ்ப்பாணத்தில் கண்காட்சி வைத்துத் தமது வியாபாரம் பெருக்கும் அரசதரப்பு - உள்ளூர் உற்பத்திகளுக்குக் காட்டும் இந்த அலட்சியப் போக்கை எவ்வாறு தொடர்ந்தும் அனுமதிக்க முடியுமென விவசாயிகளிடமிருந்து ஆக்ரோஷம் பிறப்பதையும் காணமுடிகின்றது.

எனவே - இதுதொடர்பில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விவசாயிகளின் துயர் களையப்பட, சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டும்.

இல்லையேல், ஏற்கனவே நெருக்கடிகளாலும், தடைகளாலும் நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் கடற்தொழில் போல - விவசாயமும் படுமோசமான நிலையையே சந்திக்க வேண்டியதாகிவிடும்.

இது - நாம் ஒரு காலத்தில் தலைநிமிர்ந்து பேசிய எமது தன்னிறைவுப் பொருளாதாரத்தையும் ஆட்டம் காணச்செய்துவிடும்.

# அமைதி முயற்சி பாதிக்கப்பட்டால் நாம் நிதியுதவி வழங்கமாட்டோம்!

## உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அமைதி முயற்சிகள் பாதிக்கப்பட்டால் எந்த நிதியுதவியையும் உலகவங்கி வழங்காது என்று, உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் எச்சரித்துள்ளார்.

அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதைப் பொறுத்தே நிதியுதவிகள் வழங்கப்படும். பேச்சுக்கள் தடம்புரளும் நிலை ஏற்பட்டால், நிதியுதவிகள் வழங்குவது குறித்து உலகவங்கி மறுபரிசீலனை செய்யும்.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் இரண்டு தரப்பினரையும் ஊக்குவிக்கும் வகையிலேயே நிதியுதவிகளை வழங்க உலகவங்கி முன்வந்தது. பேச்சுக்களில் இருதரப்பும் காட்டுகின்ற ஆர்வத்தைப் பொறுத்தே உலகவங்கியின் உதவிகள் அமையுமென்று புலிகளுக்கும், அரசுக்கும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர்-

உலக வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கூடாக எடுத்துச்செல்லப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப்போவதில்லை என்று புலிகள் உறுதியளித்திருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

## முதலாம் தவணை முடிவடையும் நிலையிலும்

# மட்டக்களப்பு பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகம் கிடைக்கவில்லை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் இதுவரை கிடைக்கப்பெறாததால், கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்களும், மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி மாதம் 2 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு முதலாம் தவணைக்காலம் முடிவடையும் நிலையிலும் பாடப்புத்தகங்கள் வந்து சேராததால் முதலாம் தவணைக்கான பாடத்திட்டங்களைப் பூர்த்திசெய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தரம் -1 தொடக்கம் தரம் -11 வரையிலான வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான - தமிழ், கணிதம், ஆங்கிலம், சமூகக்கல்வி, விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களுக்குப் பாடப்புத்தகங்கள் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தரம் - 3 முதல் தரம் - 6 வரையிலான வகுப்புகளுக்கு ஆங்கிலப் பாடப்புத்தகங்கள் அறவே அனுப்பி வைக்கப்படவில்லையெனவும் அதிபர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அரசாங்கத்தால் தற்போது புதிய கல்விச்சீர்திருத்தம் அமுல்படுத்தப்படுவதால், பழைய பாடநூல்களையும் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற் குறிப்பிட்ட தரங்களுக்கான முக்கிய பாடங்களுக்கான பாடப்புத்தகங்களைக் கல்வி அமைச்சு அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு அதிபர்கள் கல்வித் திணைக்களங்களுக்கு அறிவித்தல்கள் விடுத்துள்ளனர்.

## அனுரா ஒரு 'கோமாளி'யென பட்டி வீரக்கோன் கூறுகிறார்

அனுரா பண்டாரநாயக்க கூறுவதை சீரியசாக எடுத்துக் கொள்வதில்லை. அவர் ஒரு கோமாளி என்று தெரிவித்துள்ளார் - லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான பட்டி வீரக்கோன்.

இலங்கையிலுள்ள இடதுசாரிகள், ஜுராசிப் பார்க்கில் உள்ள டைனோசர்களின் புதை படிமங்கள் என அனுரா பண்டாரநாயக்க தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளித்த போதே பட்டி வீரக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு இருக்கின்றது. இதையும் மீறி கூட்டணி அமைத்துக் கட்சியைப் பலவீனப்படுத்திக் கொண்டு, இடதுசாரிகளுக்கு மக்கள் ஆதரவில்லை என்று கூறுகிறார் எனவும் பட்டி வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

## சகல வசதிகளையும் கொண்ட இளைஞர் நிலையம் யாழில்!

யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி சகல வசதிகளும் கொண்ட இளைஞர் நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது.

இந்த இளைஞர் நிலையத்தை அமைப்பதன்மூலம் வடபகுதி இளைஞர்கள் நவீன தொழிற்பயிற்சி நெறிகளைக் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

இந்த நிலையத்தில், கணினிப் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

# சமாதான முயற்சிகளை ஊக்குவிக்க காலிமுகத்திடலில் உண்ணாவிரதம்!

சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், இன்னும் சில தினங்களில் கொழும்பு காலிமுகத்திடலில் மக்களின் பங்கேற்போடு ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவிருப்பதாக, மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பெ.இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு மலையக மக்கள் முன்னணி முடிவெடுத்திருப்பதாக இராதாகிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் கொழும்புக் கிளைச் செயலாளர் மு.கனகராஜ், மாநகரசபை உறுப்பினர் குருசாமி ஆகியோர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

## இலங்கையிலுள்ள காடுகள்; ஆய்வுப் பணிகள் விரைவில்!

இலங்கையிலுள்ள காடுகள் பற்றியும் அவற்றிலுள்ள உயிரினங்கள் பற்றியும், காடுகளின் அமைவிடம் பற்றியும் ஆராயும் திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

சுற்றுச்சூழல், இயற்கை வள அமைச்சு இந்த ஆய்வை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ளது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில், 22.4 சதவீதமான பகுதி காடுகளாக இருப்பதால், இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

காடுகளின் இப்போதைய நிலை, காடுகளுக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல், காடுகளை மக்கள ஆக்கிரமித்தல் போன்ற விடயங்கள் குறித்து, இந்த ஆய்வில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில், 17 ஆயிரத்து 500 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் காடுகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## தொண்டராசிரியர் எதிர்காலம்; இன்றைய கூட்டத்தில் முடிவு

வடக்கு - கிழக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதை, அரசாங்கம் இழுத்தடித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து என்ன நடவடிக்கையை மேற்கொள்வது என்பது தொடர்பாக தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இன்று ஆராயவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில், வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களின் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இன்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதனால், இன்று நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

# வெபர் மைதானத்தில் விளையாட மாலை 6 மணிக்குப் பின்னர் தடை

மட்டக்களப்பு, வெபர் மைதானத்தில் மாலை ஆறு மணிக்குப் பின்னர் எவரும் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடக் கூடாதெனப் படையினர் தடைவிதித்துள்ளனர். 1990 ஆம் ஆண்டு முதல் வெபர் மைதானத்தில் படையினா நிலை கொண்டுள்ளனர். இந்த மைதானச் சுற்றாடலில் 23 - 3 பிரிகேட் தலைமையகம் அமைந்துள்ளது.

வெபர் மைதானத்தில் பொது மக்களும், பாடசாலை மாணவர்களும் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு இரவு 8 மணிவரை படையினர் அனுமதித்திருந்தனர்.

கடந்த சில தினங்களாக மாலை ஆறுமணிக்குப் பின்னர் வெபர் மைதானத்தில் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடக் கூடாது எனத் தடைவிதித்துள்ளனர்.

# அமெரிக்காவால் கைவிடப்பட்ட கப்பல் கடற்படையினரின் காவடியாகின்றது!


சிங்கள ஊடகங்களெங்கணும் இப்போது பிரசாரப்படுத்தப்படுகின்ற ஒருவிடயம், அமெரிக்கக் கரையோரக் காவற்பிரிவின் பாவனையிலிருந்த கப்பலொன்றினை சிறிலங்கா பெறுவது தொடர்பான செய்தியாகும்.

இக்கரையோரக் கண்காணிப்புக் கப்பல், சிறிலங்கா கடற்படையைப் பொறுத்தவரை ஒரு வரப்பிரசாதம் என்பதே ஊடகங்களின் கணிப்பு. அமெரிக்கா, தனது கனரக இராணுவ உபகரணங்களின் விற்பனைக்குக் காங்கிரஸின் அனுமதி பெறவேண்டிய நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று என்ற வகையில், இவ்விற்பனை தொடர்பான அமெரிக்கக் காங்கிரஸின் அனுமதி பெறப்பட்டுள்ளதே இந்த ஆரவாரத்திற்கான காரணம்.

ஆனால், உண்மையில் இற்றைக்குச் சரியாக 37 வருடங்களுக்கு முன் -1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி கட்டப்பட்ட கப்பலே சிறிலங்காவிற்கு வழங்கவென அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ள **"USCGC Courageous"** எனப்படும் ரோந்துக் கலமாகும்.

1967 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்ட இக்கலம் - இடையிடையே பல தரமுயர்த்தலுக்கு உள்ளாகினாலும், அதன் வயது மற்றும் திறன்குறைவு காரணமாக 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றது.

படைத்துறைசார் தகவற்தளங்கள் இக்கப்பலின் இளைப்பாறுகையை, "ஓய்வுபெற்ற இக்கப்பல் தனது அந்திமத்திற்காக கரையோரக் காவற்பிரிவின் துறையில்




காத்து நிற்கிறது" என்றே தெரிவிக்கின்றன **(She was decommissioned on 19 September 2001 and currently awaits disposal at the Coast Guard Yard).** இப்படியான ஒரு கப்பலின் வரவையே, ஏதோ நவீனங்களின் வரவுபோல் மாயை காட்டப்பட்டு சிறிலங்காவால் வரவேற்கப்படுகிறது. அதாவது, சேவையிலிருந்து இளைப்பாறிய ஒரு கலம் சில மில்லியன் டொலர்களுக்கு சிறிலங்காவின் தலையில் கட்டப்பட்டுள்ளது.

அதுகூட இக்கப்பல் 150 மில்லியன் டொலர்கள் பெறுமதியானது என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது. "150 மில்லியன் டொலர்கள் பெறுமதியான தரம்வாய்ந்த கலமொன்றைத் தர் அமெரிக்கக் கரையோரக் காவற்படை தயாராக இருந்தபோதும், மறுசீரமைக்கப்பட்ட இக்கலத்தை வாங்குவதிலேயே நாம் நாட்டம் கொண்டோம்" என்று சிறிலங்கா கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்த செய்தியே திரிபுபடுத்தப்பட்டு, சில மில்லியன் டொலர் செலவில் வாங்கப்பட்ட இக் கப்பல் 150 மில்லியன் டொலர் பெறுமதியானது என உலாவர விடப்பட்டுள்ளது.

இக் காயன்கடைச்சரக்கு ஏறக்குறைய தற்போது கடற்படையின் பாவனையிலுள்ள சுகன்யா ரகக் கலமான 'எஸ்.எல்.என். சயூரா'வின் செயற்பாட்டை ஒத்தது.

'சுகன்யா' ரகக் கப்பலைப் போன்றே உலங்குவானூர்தித் தளமுள்ள 210 அடி நீளமான இக்கலம் புளோரிடா மற்றும் கரிபியன் சார்ந்த கடற்பிரதேசங்களின் கரையோர மற்றும் ஆழ்கடற் கண்காணிப்புப் பணிகளிலே ஈடுபட்ட கலமே தவிர, போர் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட்ட தொன்றல்ல. மணிக்கு 18 கடல் மைல்

**கனடாவிலிருந்து சுதர்மா**

களையே ஆகக்கூடிய ஓட்ட வேகமாகக் கொண்டுள்ளது.

இருவருடங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தயாரிப்பான 'ஹெர்குலிஸ் - 130' ரக இராணுவப் போக்குவரத்து விமானங்கள் இரண்டை 16 மில்லியன் டொலர்களுக்கு சிறிலங்கா கொள்வனவு செய்திருந்தது. 1966 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மேற்படி விமானங்கள் கொள்வனவின் பின்னான காலத்தில் ஒவ்வொன்றும் சுமார் 400,000 அமெரிக்க டொலர் செலவில் தரமுயர்த்தலுக்கு உள்ளானபோதும், தற்போது அவை வெறுமனே சிறிலங்கா விமானப்படையின் தங்குகொட்டகையில் காட்சிப்பொருளாக அலங்கரித்து நிற்கின்றன.

இக்கப்பலின் பயன்பாடும் அவ்வாறே. அதன் வரவின் பின்னரே அதன் செயற்திறன், இயங்குதன்மை என்பவற்றை நிர்ணயிக்க முடியும். அதுவரையில், அமெரிக்காவால் கைவிடப்பட்ட கப்பல், கடற்படையின் மற்றுமொரு காவடியாகின்றது என்பதே உண்மை.

# வன்னிப் பகுதி கல்வி அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி கிடைக்கவில்லை!

## கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

கடந்த பத்து வருடங்களாக வன்னிப் பிரதேசத்தின் மீது நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையின் பாதிப்பிலிருந்து வன்னிப் பகுதி மாணவர்கள் இன்னமும் மீளவில்லை எனத் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத் தடைகளால் வன்னிப்பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்தப் பாதிப்புக்களிலிருந்து அவர்கள் இன்னமும் மீளவில்லை. புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்த பின்னர், வன்னிப் பகுதிக் கல்வி அபிவிருத்திக்குப் பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

ஆனால், இந்தத் திட்டங்களுக்கான நிதியுதவிகள் இன்னமும் வந்து சேரவில்லை. இதனால், மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு, வவுனியா பகுதிகளில் படையினர் சோதனைகள் தீவிரம்

வவுனியா, கொழும்புப் பகுதிகளில் படையினர் சோதனைச் சாவடிகளைப் பலப்படுத்தியுள்ளதுடன், சோதனை நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் சில பகுதிகளில் திடீர் சோதனைகளை நடத்தி, தீவிர விசாரணைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், கொழும்பிலிருந்து வவுனியா வரையிலான நான்கு இடங்களில் படையினர் சோதனைகளை நடத்துவதாக அங்கிருந்து வரும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வவுனியாவில் படையினர் முன்னரங்கப் பகுதிகளில் புதிதாக முட்கம்பிவேலிகளை அமைத்துப் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான நோபல் பரிசாளர் விடுதலைப் புலிகளை சந்திப்பார்!

(கொழும்பு)

சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்ற வட அயர்லாந்து நாட்டவரான ஜோன் கியூம், வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது அரசாங்கத்துக்கும் -விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே நோபல் பரிசுபெற்ற அயர்லாந்து நாட்டவரான ஜோன் கியூம் இலங்கை வரவுள்ளார்.

இவர் தனது விஜயத்தின்போது அரசாங்கத் தரப்பு அமைச்சர்கள், பல்வேறு அரசியற்கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார். இவர் வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழீழ காவற்துறை நடுவப்பணியகம் அடுத்த மாதம் கிளிநொச்சியில் திறப்பு!

தமிழீழ காவற்துறையின் நடுவப்பணியகம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வருகின்றது. காவற்துறையின் நடுவப்பணியகத் திறப்புவிழா அடுத்த மாதம் நடைபெறவிருப்பதாக தமிழீழ காவற்துறையின் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவருட காலத்தில் காவற்துறையின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது -முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விசுவமடு, கிளிநொச்சி, பளை, மாங்குளம், அக்கராயன், பூநகரி, நாச்சிக்குடா, இலுப்பைக் கடவை போன்ற இடங்களிலும், மட்டக்களப்பில் பளுகாமத்திலும், திருகோணமலையில் மூதூர் கிழக்கிலும் தமிழீழ காவற்துறையின் காவல் நிலையங்கள் இயங்கிவருவதாகவும் பா.நடேசன் தெரிவித்தார்.

மன்னார் - ஆண்டான்குளத்தில் புதிய காவல் நிலையத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐயப்பனே தேரேறி வருக!

பாடு மனமே நிதமும் பாடு மனமே
சுன்னாக நகர் ஐயப்பனை பாடு மனமே
அல்லல் தீர்த்திடும் ஆதி முதல்வனாம்
அரிஹரன் திருமகனைப் பாடுமனமே
தாயின் நோய் தீர்த்த தயாளனை
தாளையடி ஐயப்பனை பாடு மனமே
வில்லாதி வீரனாம் வன்புலி நாயகன்
வீரமணி கண்டனை தினம் பாடுமனமே
வஞ்சனை நீக்கி வல்வினை போக்க
வண்ணத் தேரேறும் மெய்யப்பனை பாடுமனமே பாடு

*- தட்சாயினி தர்மலிங்கம்.*

## சுவிஸ் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் குழு

# சமஷ்டி குறித்து ஆராய எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. உறுப்பினர் கொழும்பு திரும்பினார்!

சுவிற்சர்லாந்து நாட்டுக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழு, அங்கு சமஷ்டி குறித்து ஆராய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக நாடு திரும்பியிருக்கிறார்.

அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த 11 உறுப்பினர்களைக் கொண்ட குழு, சுவிற்சர்லாந்து சென்றுள்ளது.


இக்குழு சுவிற்சர்லாந்தின் சமஷ்டி ஆட்சிமுறை, மனித உரிமைகள் காப்பு விவகாரங்கள் தொடர்பாக ஆராயவே அங்கு சென்றிருந்தது. இந்தக் குழுவில் ஜே.வி.பியின் சார்பில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலகவே இந்த விஜயத்திலிருந்து விலகி நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையில் சமஷ்டி ஆட் சியை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான திட்டங்கள் குறித்து இக்குழு சுவிற்சர்லாந்தில் சட்ட, அரசியலமைப்பு நிபுணர்களின் குழுக்களுடன் ஆராய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நந்தன குணதிலக நாடு திரும்பியுள்ளார்.

சமஷ்டி குறித்து ஆராயச் செல்வதாக பய[illegible]த்திற்கு முன்னரே ஜே.வி.பி அறிந்திருந்தபோதும் இவ்வாறு இடையில் விலகியமை ஜே.வி.பியின் அரசியல் நிலைப்பாடுகள் எத்தகையதென்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக உள் ளதாக ஐ.தே.க. பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(க)

ICC Cricket World Cup SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## அலைகள் ஓய்வதில்லை

SUPER SIX ஆட்டங்களின் இறுதிச் சமாவும் முடிவடைந்துவிட்டது. இலங்கை ரசிகர்களின் எதிர்பார்ப்பும் நிறைவேறிவிட்டது. நியூசிலாந்து கௌரவமாகவே தன் நாடு திரும்புகிறது. கிரிக்கெட் ரசிகர்கள் விடை கொடுக்கும்போது, மற்றவர்களின் மனதைப் புண்படுத்த விரும்புவதில்லை.


இந்த நேரத்தில், கென்யாவுக்குப் போகாமல், நாலு புள்ளிகளை இழந்ததைச் சுட்டிக்காட்டி அவர்கள் மனதில் வேதனையைக் கிளப்ப முயலவில்லை. என்றாலும் - கென்யாவுக்குப் போகாததால், எந்த வகையில் நியூசிலாந்து சாதக, பாதகங்களை அனுபவித்தார்கள் என்று அவர்களே சுயவிமர்சனம் செய்துகொள்ளட்டும்.

திரும்பவும் நியூசிலாந்து, இந்திய ஆட்டத்தைப் பார்த்தால், இந்திய வெற்றி மோகத்தின் முன் நியூசிலாந்தால் நின்றுபிடிக்க முடியவில்லை என்பது உண்மை. மேலும், கென்ய அணியை அரை இறுதிப் போட்டியில் சந்திக்குமுன், இலங்கைக்கு வரமளிக்கும் ஆபத்பாந்தவனாக இந்தியா மாறியதும் உண்மை.

மறுவளமாக - கென்யா, அவுஸ்திரேலிய அணியுடன், தன்னைப் பரீட்சித்துப் பார்த்துக் கொண்டுள்ளது. இதில் யாருக்கு வெற்றி தோல்வி என்று கணக்குப் பார்ப்பதைவிட, கென்யா பலம் குறைந்த அணி என்ற வகையிலும், அரை இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் அணி என்ற வகையிலும், எவற்றைப் பெற்றுக்கொண்டது என்று பார்ப்பது பயனளிக்கும்.

முதலாவதாக - அவுஸ்திரேலிய அணியால், கென்யாவின் அனைத்து வீரர்களையும் ஆட்டமிழக்கச் செய்ய இயலவில்லை. அவர்கள் 50 ஓவர்கள் முடிவில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 174 ஓட்டங்கள் பெற்றார்கள். இதில் டிக்கோலோ 51 ஓட்டங்கள், ரவீந்து ஷா 46 ஓட்டங்கள், மோடி 39 ஓட்டங்கள் பெற்றனர். அடுத்தது அவுஸ்திரேலியாவால் ஒரு விக்கெட் அல்லது இரண்டு விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைய முடியவில்லை. ஐந்து விக்கெட் இழப்பிற்கே வெற்றி இலக்கை அடையமுடிந்தது. இந்த வகையில் கென்யா தனது நம்பிக்கையை இன்னும் வளர்த்துக் கொண்டுள்ளது. இதுவே அவர்களின் வெற்றி.

இன்னொரு வெற்றி ஆட்டநாயகன் கென்ய அணி வீரர் கரீம்.



கென்யா - முன்னேற்றத்திற்கு ஒரு முன் மாதிரி.

தொடர்ந்து கர்ச்சிக்கிறது கென்யா. GOOD LUCK.

- நிர்மலன்.

## இந்தியா கவனியுங்கள்!

கடந்த வெள்ளி, இந்தியாவுக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையில் நடந்த மோதல் எதிர்பார்த்ததற்கு மாறாக அமைந்துவிட்டது. நியூசிலாந்து அணி SEMI FINAL இற்குள் காலடி வைப்பதற்கு மிகவும் கடுமையாகப் போராடும் என்று பலரும் கூறியிருந்தனர்.

ஆனால் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் கங்கூலி, முதலில் FIELDING செய்யத் தீர்மானித்து நியூசிலாந்து அணி வீரர்களை திணறடித்துவிட்டார். ஏழாவது தொடர் வெற்றியையும் பெற்றுவிட்டார்.

நீண்டநாட்களாக இந்திய அணி BOWLING இல் முன்னேற்றம் இல்லாததால், பல போட்டிகளில் தோல்விகளைச் சந்தித்தது. உலகக்கிண்ணத்தில்கூட எங்கே இந்திய அணி விக்கெட்டுக்களை வீழ்த்தப்போகிறது, ஓட்டங்களைக் கட்டுப்படுத்தப் போகிறது? என்று பலராலும் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்க, இந்திய அணியோ, மிகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கையில் எதிரணியை ALL OUT ஆக்கியிருக்கிறார்கள் பல போட்டிகளில்.


அணித்தலைவர் கங்கூலி, மிக நீண்டகாலத்தின் பின் சிறிநாத்தை ICC சம்பியன் போட்டியிலும், WORLD CUP இலும், மற்றும் சில போட்டிகளிலும் இறக்கி அதில் வெற்றியும் கண்டுள்ளார். அத்துடன் ஷாகிர் கான் மற்றும் நேஹ்ரா ஆகியோர், மிகமிகத் துல்லியமாக BOWLING செய்து, வெற்றிக்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், மூன்று வேகப்பந்து வீச்சாளரும் MAN OF THE MATCH ஆகியுள்ளனர் என்பது மெச்சத்தக்கது.



இந்தியா - டிஸ்கஸ் பண்ணிச் செய்யுங்கோ!

நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, நமீபியா, நெதர்லாந்து ஆகிய அணிகள் 200 ஓட்டங்களை எட்டவில்லை என்பது இந்திய அணியின் BOWLING POWER ஐ செம்மையென எடுத்துக் கூறுகிறது.

இலங்கையுடனான ஆட்டத்தில், இளம் வீரன் மொகமட் கை.்.ப் மாத்திரம் 4 CATCHகளைப் பிடித்து, FIELDING இலும் வலுவான நிலையில் இந்தியா நிற்கின்றது என்று உதாரணம் காட்டுகின்றார். 80 வீதம் FIELDING இல் திருப்தியாக இருந்தாலும் கூட இந்தியா கவனயீனப்பிழைகளைத் தவிர்த்து, களத்தடுப்பை அதி உச்சத்திற்குக் கொண்டுவந்தால், இந்தியாவுக்கு எதிர்காலம் இன்னும் நல்லதாக அமையும்.



ஷேவாக் - கவனம் என்றால் கவனிக்க வேண்டும்.

சில மூத்த வீரர்கள் பாய்ந்து, உருண்டு பந்துகளைப் பிடிக்க, உடற்கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடு இடம்கொடுக்காவிட்டாலும், சில நேரங்களில் SUPTITUTE ஆக RESERVE ஆக இருக்கும் இளம் வீரர்களைக் களத்தில் இறக்குகின்ற தந்திரோபாயத்தை இறுக்கமான நேரங்களில் கையாளலாம்.

இன்னும் BATTING ORDER அசைக்க முடியாததாக இருந்தாலும்கூட, சில நேரங்களில் முன்வரிசை வீரர்கள் CARELESS ஆக விளையாடி, சில சந்தர்ப்பங்களில் திக்குமுக்காடுகின்ற நிலை இன்னும் இருக்கத்தான் செய்கின்றது. இதற்கு உதாரணமான ஆட்டங்கள்தான் - கென்யா, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, நியூசிலாந்து ஆகிய அணிகளுக்கு எதிரான ஆட்டங்கள். அப்போதைய சந்தர்ப்பங்களில் அநேகமாக உபதலைவர் டிராவிட் தோள் கொடுத்து வெற்றிக்கு வழிசமைக்கிறார் என்பது சிறப்பு.

இனிவரும் காலங்களில் இந்தியா இத்தவறுகளுக்கு நிவாரணம் தேடி விளையாடினால் SEMI FINAL என்ன FINAL கூட இந்தியாவிற்கு உரியதாகும் என்பதில் ஐயமில்லை.

- வீ.ஏ.கோவி.

## வேகத்தின் மோகம் சாபமா?

உலகின் அதிவேகப் பந்துவீச்சாளர் யார் என்ற வினாவிற்கு இந்த ஆண்டின் (2003) உலகக் கிண்ணப் போட்டிகள் விடைதந்தன. அதுமட்டுமன்றி அடுத்தடுத்த வரிசைகளில் யார் யார் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடிந்துள்ளது.

இதில் குறிப்பாக, 160 KMPH இற்குக் கூடுதலான வேகத்தில் யார், பந்து வீசுகிறார்கள் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. அந்தவகையில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் வீரர் அக்தரின் பந்தொன்று, 161.3 KMPH என்ற வேகத்தில் வீசப்பட்டது. இதுவே கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாக வீசப்பட்ட பந்து.


இதைத் தொடர்ந்து, இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின், பிரெட் லீ வீசிய பந்தொன்று, 160.7 KMPH என்ற வேகத்தில் அமைந்தது. இது இரண்டாவது இடம்பிடிக்க, கனடாவிற்கு எதிரான ஆட்டத்தில், நியூசிலாந்தின் ஷேன் பொண்ட் வீசிய பந்தொன்று 153.4 KMPH ஐக் கடந்து மூன்றாவது இடத்தையும், கென்யாவிற்கு எதிரான ஆட்டத்தில் மேற்கிந்திய வீரர் ஜேர்மைன் லோசன் வீசிய பந்தொன்று 153.2 KMPH இல் சென்று நான்காவது இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தச் சாதனைகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது சொல்ல முடியாது. இதில் ஒரு விடயம் என்னவென்றால், மிக அண்மைக்காலத்தில் வேகப்பந்து வீச்சாளர்களால், துடுப்பாட்ட வீரர்கள் கவிழ்வது மிக மிகக்குறைந்துவிட்டது.

ஆனால் - தற்போது மீண்டும் LARWOOD JARDINE பாணியில் BODY LINE BOWLING செய்து விக்கெட் எடுக்கலாம் என்றொரு சிந்தனை ஏற்பட்டுவருவதுபோல் தோன்றுகிறது. இந்தச் சிந்தனையை ஏற்படுத்தியிருப்பவர்கள் அவுஸ்திரேலியர்கள். அவர்கள் வேகப்பந்தைக் குத்தி எழுப்பித் துடுப்பாட்ட வீரரை வீழ்த்துவதில், ஓர் திருப்தி அடைகிறார்கள்போலத் தெரிகிறது.

ஏனெனில் - ஒரு கடுமையான பந்தை வீசியபின் அவர்களின் முகபாவம் அப்படியொரு எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. ஆஷஸ் தொடரில் அலெக்ஸ் டியூடர், லீயின் பந்துவீச்சில் சுருண்டு விழுந்து ஆறு இழைபோட்டுக் கொண்டார். அதன் பின் உலகக்கிண்ணப் போட்டிகளில் சனத் வெளியே அனுப்பப்பட்டார் மீண்டும் லீயால். அநேக சந்தர்ப்பங்கள், எப்படியோ துடுப்பாட்ட வீரர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதாகத்தான் இருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, உலக சாதனை வேகம் எதுவும் பற்றிக் கவலைப்படாத சமிந்த வாஸ், 2003 உலகக்கிண்ணப் போட்டிகளில் 20 விக்கெட்டுக்கள் பெற்று முன்னணியில் இருக்கிறார் என்பது இன்னொரு செய்தி.



மக்ரா - இலக்கு யாருடைய தலைக்கு?

- ஜேர்சப் கிருஷ்ணா -

## ஒரு நாள் போட்டி - மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்களுக்கும், பரி. யோவான் கல்லூரி பழைய மாணவர்களுக்குமிடையே வருடாவருடம் இடம்பெறும் சிநேகபூர்வ ஆட்டத்தில், நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நான்கு வருடங்களின் பின்னர் - மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பரி.யோவான் பழைய மாணவர் அணி, 48 ஓவர்களில் 9 இலக்கு நஷ்டத்திற்கு 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில், கௌரிபாலன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 74 ஓட்டங்களைப் பெற்று, அணியின் ஸ்திரத்தன்மைக்கு வழி வகுத்தார். தொடர்ந்து 233 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில், களமிறங்கிய மத்திய கல்லூரி அணியினர், 43 ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர்.

இதில் காண்டீபன் 50 ஓட்டங்களையும், கலா 43 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் பரி.யோவான் கல்லூரி பழைய மாணவர் அணி சார்பில் ராகுலன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

- எவ்.எக்ஸ்.சுதர்சன் -

உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

உங்கள் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான ஓர் எதிர்காலத்தை ஏற்படுத்த
இலங்கையின் தலைசிறந்த வங்கியுடன்
அருணலு சிறார் கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்

அருணலு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் கப்பல் மூழ்கடிப்பில் இந்திய விமானமும் பங்கெடுப்பு

(கொழும்பு)

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் நடவடிக்கையில் கடற்படைக் கப்பல்கள் ஈடுபட்டிருந்தபோது, இந்தியக் கடற்படையிடம் இருந்து தொடர்ச்சியாக புலனாய்வுத்தகவல்கள், இராஜதந்திர வட்டாரங்களூடாகக் கிடைத்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை, கடற்படைக்கு நெருக்கமான வட்டாரங்களே தெரிவித்தன. புலிகளின் கப்பல் தாக்குதலுக்குள்ளான சம்பவம் தொடர்பாகக் கடற்படை வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிடுகையில்-

கடற்படையின் எஸ்.எல்என். சயூரா என்ற கப்பல், கப்டன் ருவான் டயஸ் தலைமையில் ரோந்துப் பணிக்காக அனுப்பப்பட்டிருந்ததாகவும், இதில் 135 கடற்படையினர் இருந்ததாகவும், 'வருண கிரண' நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இக்கப்பலே புலிகளின் கப்பலை தாக்கியழித்ததாகவும் கூறியுள்ளன.

புலிகளின் கப்பல் தொடர்பான தகவல் கிடைத்ததும், இந்தியக் கடற்படையில்- முன்னர் ஐ.என்.எஸ் சரயு என்ற பெயரில் இருந்ததும், தற்போது இலங்கைக் கடற்படையில் சயூரா என்ற பெயருடன் இருப்பதுமான கப்பல், குறித்த கடற்பகுதிக்கு அனுப்பப்பட்டது.

இதற்குத் துணையாக, கடற்படையின் பீரங்கிப் படகுகளும், அதிவேகத் தாக்குதல் படகுகளும் அனுப்பி வைக்கப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 10 ஆம் திகதி காலை 7.45 மணிக்கு, கப்பல் தொடர்பான தகவல் கிடைத்ததாகவும், இதையடுத்து சர்வதேச கடற்போக்குவரத்து விதிகளுக்கமைய, கப்பல்களுக்கிடையில் பயன்படுத்தப்படும் 'சனல் 16' என்ற அலைவரிசையூடாக, கப்பலுடன் 'சயூரா' தொடர்பு கொண்டதாக கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முதலில் பதில் கிடைக்கவில்லை என்றும், பின்னர் 'மோட்டார் டாங்கர் வோர்லொஸ்' என்று மேற்கத்திய பாணியிலான உச்சரிப்புடன் பதிலளிக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்தது.

தொடர்ந்து சயூராவிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டதாகவும், ஆனால் அவற்றிற்கு பதில் வழங்கப்படவில்லை என்றும்,

இந்தநிலையில், கடற்படையின் எஸ்.எல்.என். உதார, எஸ்.எல்.என். பிரதாப ஆகிய பீரங்கிப்படகுகளும், பி.494, பி.474 ஆகிய இரண்டு அதிவேக ரோந்துப் படகுகளும் சயூராவுக்கு உதவியாக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், புலிகளின் கப்பலை அழிக்கும் நடவடிக்கைகளை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கடற்படையின் நடவடிக்கை இயக்குநர் ரீயர் அட்மிரல் சரத் வீரசேகரா, கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வசந்த பரணகம, வடபிராந்திய கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் நந்தன துடுவத்த ஆகியோர் இணைந்து வழிநடத்திக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் கப்பல்களுக்கு உதவும் வகையில், இந்திய கடற்படை விமானம் ஒன்றும் அப்பகுதியில் பறந்து கொண்டிருந்ததாகவும், சயூராவிலிருந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கிடைக்காததால், சயூரா புலிகளின் கப்பலை நெருங்கியதாகவும்,

இதன்போது, புலிகளின் கப்பல் ஒரு எரிபொருள் டாங்கர் என்று அடையாளம் காணப்பட்டதாகவும், இக்கப்பல் பச்சை, வெள்ளை ஆகிய நிறங்களில் இருந்ததாகவும், சுமார் 70 மீற்றர் நீளமுடையதென்றும், 500 தொன் எடையுள்ளதென்றும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

புலிகளின் கப்பலில் எம்.வி. கோய் (MV KOEI) என்று எழுதப்பட்டிருந்ததாகவும், புலிகளின் கப்பலில் இருந்து பதில் கிடைக்காததால், முதலில் வானத்தை நோக்கிச் சுடப்பட்டு எச்சரிக்கப்பட்டதாகவும், காலை 9.05 மணியளவில் கப்பல் நகரத் தொடங்க, கப்பலை நோக்கி கடற்படையினர் சுட்டதாகவும் தெரிவித்துள்ளனர். பின்னர், காலை 10.15 மணியளவில் 6000 மீற்றர் வீச்செல்லை கொண்ட, 40 மி.மீ. போபர்ஸ் பீரங்கிகளால் புலிகளின் கப்பலை நோக்கி சயூராவிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தொடர்ந்து கடற்படையின் பி.494, பி.474 ஆகிய இரு அதிவேகத் தாக்குதல் படகுகளும், தாக்குதலில் இணைந்து கொண்டதாகவும்,

இதனையடுத்து கப்பல் தீப்பிடித்து எரியத் தொடங்கியதாகவும், காலை 10.30 மணியளவில் கப்பல் சிதைய ஆரம்பித்து 11.30 மணியளவில் மூழ்கத் தொடங்கி, பிற்பகல் 3 மணிக்கு முற்றாக மூழ்கி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட தகவலை அறிந்ததும், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கு, ஜனாதிபதி சந்திரிகா தனது பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது. (க)

# ஹக்கீமுக்கு நெருக்கமானவர் வீட்டில் துப்பாக்கி, இராணுவச் சீருடைகள்!

## பொலிஸார் கைப்பற்றினர்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரான பாயிஸின் வீட்டிலிருந்து, ரி.56 ரகத் துப்பாக்கியையும், இராணுவச்சீருடைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களின் பின்னணியில் இருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே, நேற்று மாலை பாயிஸின் வீட்டைப் பொலிஸார் சோதனையிட்டிருந்தனர்.

இதன்போது, துப்பாக்கி மற்றும் இராணுவச் சீருடைகள் கைப்பற்றப்பட்டன. கே.ஏ.பாயிஸ், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் நெருங்கிய நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மக்களின் ஏகபிரதிநிதி; பிரபாகரன் நிரூபித்துவிட்டார்

## முன்னாள் அமைச்சர் இராசதுரை தெரிவிப்பு

தொலை நோக்குடன் பிரச்சினைகளைத் தீர்க்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் பெரும் முயற்சி எடுத்துவருவதாக, முன்னாள் அமைச்சரும் மலேசியாவுக்கான முன்னாள் தூதுவருமான செல்லையா இராசதுரை தெரிவித்தார்.

மலேசியாவிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எந்த வித சவால்களுமற்ற விதத்தில், பிரபாகரன் தன்னை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக நிலை நிறுத்தியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

## ரஷ்ய ஏவுகணை கொள்வனவு முயற்சி

# உள்ளகப்புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்தது!

விடுதலைப் புலிகள், லாவோஸ் தூதரகத்தினுடாக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய எடுத்த முயற்சி குறித்து, உள்ளகப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

ரஷ்யத் தூதுவர், வெளிவிவகார அமைச்சருக்குச் சமர்ப்பித்த உத்தியோகப்பற்றற்ற அறிக்கையில், றொஸ்பொறோனோ எக்ஸ்போர்ட் (Rosborono export) நிறுவனத்திடம் இருந்து, புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பெற முயற்சித்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதும், எவ்விதம் இதனைக் கையாள்வது என்பது குறித்து அரசாங்கம் கருத்து வெளியிடவில்லை எனவும் கூறப்படுகின்றது.

### கண்காணிப்பு...

புலிகளிடமும் கையளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை தொடர்பாக இருதரப்புக் கருத்துக்களும் அறிந்த பின்னரே, ஊடகங்களுக்கு இது வெளியிடப்படும் எனவும், அவர் தெரிவித்தார். அரச, மற்றும் புலிகள் தரப்பின் கருத்துக்களை அறியாமல், ஊடகங்களுக்கு இந்த அறிக்கையை வெளியிடுவது நல்லதல்ல என்றும், இருதரப்புக் கருத்துக்களும் கிடைத்தால், இன்றே அந்த அறிக்கையை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் ஹொக்லண்ட் மேலும் தெரிவித்தார்.

### எரிமலையின்...

துச் சிதறியதாகவும், அதைத் தொடர்ந்து இன்னமும் கூட பூமிக்கு அடியில் எரிமலை கனன்று கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஹெக்கோன் என்ற இடம் மிகவும் ரம்மியமான சுற்றுலாத்தலம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இடத்தில்தான், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.

### கடற்பிராந்திய...

செலுத்தப்படும். குறிப்பாக உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் குறித்தும் இப்பேச்சில் ஆராயப்படும்.

**நம்பியார் அறிக்கை வராவிட்டாலும் பேசுவோம்**

பேச்சுக்கள் ஆரம்பமாகும் முன்னர் அல்லது பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது, உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான, ஜெனரல் நம்பியாரின் அறிக்கை அரசாங்கத்தினால் எமக்குத் தரப்படலாம்.

பேச்சுக்களுக்கு முன்னரோ, பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதோ, நம்பியாரின் அறிக்கை எம்மிடம் தரப்பட்டால், அது குறித்து ஆராய்ந்து எமது கருத்தினை அறிவிப்போம். நம்பியாரின் அறிக்கை வெளிவராவிட்டாலும், உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு குறித்து ஜப்பானில் ஆராயப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### முத்தமிழ் விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினால், எதிர்வரும் 20 ஆம் திகதிமுதல் நடத்தத் திட்டமிட்டிருந்த முத்தமிழ் விழா, பிற்போடப்பட்டுள்ளதாக கலை பண்பாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (ச)

### கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியினருக்கும், லண்டன் மாநகரத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள, மத்திய கல்லூரி பழைய மாணவர்களுக்குமிடையேயான சிநேகபூர்வ கூடைப்பந்தாட்டப் போட்டி, இன்று காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது. (60)

### காரைநகரில் வீதித்தடை நீக்கம்

(மானிப்பாய்)

காரைநகர் சுற்றுவீதி, மக்களின் பாவனைக்குத் திறக்கப்பட்டுள்ளது. கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக, பொதுமக்கள் பாவனைக்கு இந்த வீதி தடைசெய்யப்பட்டிருந்தது.

இந்த வீதி ஊடாக, பஸ் சேவை ஒன்றினை நடத்துவதற்கும், வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (100)

### சிங்களத்திரைப்படமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

'பூரணையில் ஒரு மரணம்' என்ற சிங்களத் திரைப்படம், இன்று மாலை 3.30 மணிக்கு, அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தில் அகலத் திரையில் காண்பிக்கப்படவுள்ளதுடன், இத்திரைப்படத்தின் இயக்குநர் பிரசன்ன விதானகேயுடனான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

### ஸ்கிறிப் நெற் பயிற்சி முகாமுக்கு 10 பேர் தெரிவு

'ஸ்கிறிப்நெற்' 'மூன்றாம் சுற்று திரைக்கதை உருவாக்கல் பயிற்சி முகாமுக்கு, பத்துப்பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக 'ஸ்கிறிப்நெற்' உதவித்திட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அமரதாஸ்(கிளிநொச்சி), பாஸ்கரன்(பருத்தித்துறை), கெளதமன்(மானிப்பாய்), ஜமுனாராணி (அச்சுவேலி), கேசவராஜன் (முள்ளியவளை), பவுலஸ்(மன்னார்), பிறேமினி (சாவகச்சேரி), இராகவன் (கரவெட்டி), சாரங்கா (சாவகச்சேரி), சாந்தன் (சுதுமலை) ஆகியோருக்கான மூன்றாம் சுற்று திரைக்கதை உருவாக்கல் பயிற்சி முகாம், நாளை முதல் 21 ஆம்திகதி வரை, யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொண்டராசிரியருக்கு ஒருவாரத்துக்குள் நியமனம் வழங்காவிட்டால் வேலைநிறுத்தம்!

## தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒரு வாரத்துக்குள் ஆயிரம் தொண்டராசிரியர்களுக்கான நியமனத்தை அரசாங்கம் வழங்க வேண்டும். இல்லையேல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக, தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவித்துள்ளதாவது.

வட-கிழக்கில் பத்தாயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளது. ஆனால், நாட்டின் ஏனைய பகுதிகளில் பதினைந்தாயிரம் சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.

இந்த நிலையில், சிங்களமொழி மூல தொண்டராசிரியர் நியமனத்துடன், தமிழ்மொழி மூல தொண்டராசிரியர் நியமனத்தை ஒப்பிட முடியாது. அரசாங்கம் தமிழ்மொழி மூல தொண்டராசிரியர் நியமனம் வழங்காததற்குக் காரணங்கள் கூறுவதைத் தவிர்த்து, உடனடியாக ஆயிரம் பேருக்கும் நியமனம் வழங்கவேண்டும். இல்லையேல் தமிழர் ஆசிரியர் சங்கம் தொடர்ச்சியான வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(அராலி)

அராலி, பாரதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் வலி மேற்கு, வலிகிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த கழகங்கள் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி ஏப்பிரல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில், 30 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றுகின்றன. (118)

### பேச்சு மேசையில்...

டன் பேசியபோதே தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டார்.

சில விடயங்களில் இறுதியான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் இம்முறை மிகவும் உறுதியாக இருப்பதையே அவர் இப்படிக் கூறினார்.

### நாட்டில்...

பகுதிகளுக்கும் சென்று இது தொடர்பாக ஆராய்ந்திருந்தார்.

இவர் தற்போது இது குறித்த அறிக்கையைத் தயாரித்து வருவதாகவும், இந்த அறிக்கையை அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிகிறது.

### தளபதிகள்...

விமானப்படை உலங்குவானூர்தி மூலம் புறப்பட்டுச் சென்றனர்.

வன்னியில் இருந்து புறப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவினரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான், மூத்த தளபதி கேணல் பானு, திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணி சிறப்புத் தளபதி துர்க்கா, தளபதி வீமன், தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி உட்பட, தளபதிகளும், துறைசார் பொறுப்பாளர்களும், போராளிகளும் வழியனுப்பி வைத்தனர்.

இவர்கள் நேற்றிரவு 11 மணியளவில் விமானம் மூலம், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ரோக்கியோவுக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் தெரியவருகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.